Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து ராம்கோ
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 10 (14.01.2003) செவ்வாய்க்கிழமை இதழ் : 105

# புலிகளின் குரல் ஒலிபரப்பை தடுக்க ஜெயலலிதா உத்தரவு!

## புதிய கருவிகளின் கொள்வனவையடுத்து நடவடிக்கை

(சென்னை)

**விடுதலைப்புலிகளின் 'புலிகளின் குரல்' வானொலிச் சேவையின் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் கேட்கமுடியாதவாறு தடைசெய்யும் முயற்சியில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



புலிகளின் குரல் வானொலியின் அலைவரிசையை தமிழ்நாட்டில் கிரகிக்க முடியாத அளவுக்கு அதைத் தடைசெய்யுமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.


விடுதலைப் புலிகள் அண்மையில் புதிதாகத் தருவித்த வானொலிச் சேவை விஸ்தரிப்புக் கருவிகள், இச்சேவையை தமிழகத்திலும் கேட்கக்கூடியதாக மாற்றும் என்ற நிலையையடுத்தே, இந்நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விண்ணாணம் விநாசியர்



அம்மையார்மாருக்கு எல்லாமே அரசியலாப் போச்சுது...

# லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் இவ்வாரம் இலங்கை வருகிறார்



இந்திய இராணுவ லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் இந்த வாரம் இலங்கை வருகின்றார். உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்க்குடியேற்றுவது தொடர்பாக இலங்கை இராணுவத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காகவே அவர் இங்கு வருவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் மோதலில் ஈடுபட்டது. அந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே சதீஸ் நம்பியார் இலங்கை ராணுவத்திற்கு ஆலோசனை (10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக அகதிகளை அழைத்தல் கிளிநொச்சியில் விசேட கூட்டம்!

(கிளிநொச்சி)

இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகளை மீண்டும் திருப்பி அழைப்பது தொடர்பான விசேட கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இன்றைய கூட்டத்துக்கு, வடக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பிரதிநிதிகள் உட்பட பல அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் விடுதலைப் புலிகள் சார்பில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் சிறான் அமைப்பின் சார்பில் அதன் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் தமிழ் அகதிகள் தமிழகத்தில் தங்கியுள்ளனர். இவர்களில் அறுபத்து நாலாயிரம் பேர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் வெளியிடங்களில் தங்கியுள்ளனர்.

இம்மக்களைத் திருப்பியழைத்து மீண்டும் அவர்களின் சொந்த இடங் (10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கான மின்விநியோகம் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

(கொழும்பு நிருபர்)

யாழ்.குடாநாட்டுக்கான மின்சார விநியோகத்தை மீள ஒழுங்குபடுத்துவதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் இலங்கை மின்சார சபை நேற்று ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

தற்போது சீரற்ற நிலையில் உள்ள மின் விநியோகத்தைச் சீரமைக்கும் நோக்குடன் மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

# இராணுவப் புலனாய்வுத்துறை; மறுசீரமைக்க ரணில் உத்தரவு!

இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவு மறுசீரமைக்கப்படவுள்ளது. அதற்கான உத்தரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு வழங்கியுள்ளார்.

இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் பலம் வாய்ந்த கட்டமைப்புக்கள் இல்லையென்றும், ரகசியத் தகவல்களை பெற்றுக்கொள்வதில் குறைபாடுகள் இருப்பதாகவும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளினால் கண்டறியப்பட்டு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், அது குறித்த விடயத்தில் ஜனாதிபதி இதுவரையும் நடவடிக்கை எதுவும் எடுக்காததினால் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப் (10ஆம் பக்கம் பார்க்க)

# விழிப்புலனற்ற யுவதி மீது வல்லுறவு புரிய முயற்சி!

## நாகவிகாரை யாத்திரிகர் மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த விழிப்புலனிழந்த இளம் யுவதி மீது பாலியல் வல்லுறவு செய்ய முயற்சி செய்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. யாழ். நாகவிகாரைக்கு அண்மையில் உள்ள யாத்திரிகர் விடுதியில் தங்கியிருந்த, ரத்மலான விழிப்புலனற்றோர் பாடசாலையைச் சேர்ந்த மாணவி மீதே மேற்படி வல்லுறவு முயற்சி நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாகத் தென் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கொழும்பு பிரதி மேயரை ஆட்சேபித்து யாழ். மாநகரசபையில் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மாநகரசபை பிரதி மேயர், பிறிதொரு ஆளுகைக்குட்பட்ட மாநகரசபைப் பிரதேசத்தில் தலையிடுவது தம்மை அவமதிக்கும் செயல் எனக்கூறி யாழ்.மாநகர மேயர் உட்பட உறுப்பினர்களும், அலுவலர்களும் நேற்றுக்காலை 11 மணிக்கு மாநகரசபை வாயிலை வழிமறித்து கறுப்புப்பட்டியணிந்து போராட்டமொன்றை நடாத்தினர்.

நேற்றுமுன்தினம், அமைச்சர் மகேஸ்வரனின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து வருகைதந்த கொழும்பு மாநகரசபை பிரதிமேயர் அசாத் சாலி தலைமையிலான குழுவினர் யாழ். (10ஆம் பக்கம் பார்க்க)



யாழ். மேயர் கந்தையன் தலைமையில் நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்ற கறுப்புப்பட்டிப் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

# யாழ்.மருத்துவபீடத்திற்கு மேலும் 9 பேர் அனுமதி!

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவத்துறைக்கு மேலும் 9 மாணவர் களை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கெனத் தெரிவான மாணவர்களின் பெயர் விபரங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் வெளியான 'இசற்' புள்ளி முறையிலான தெரிவில், தலா 30 பேரே யாழ் மாவட்டத்திலிருந்து மருத்துவ மற்றும் பொறியியற் துறைகளுக்குத் தெரிவாகினர்.

இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, மேலும் 9 மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறைக்குத் செரிவாகியுள்ளனர்.

## நாட்காட்டி




உள்ளே நமது ஈழநாடு தினசரியின் நாட்காட்டி, இன்றைய பதிப்புடன் வழங்கப்படுகிறது. தவறாது பெற்றுக்கொள்ளவும்.

# 2003 கல்வி அபிவிருத்தித் திட்டம்

# கிளிநொச்சியில் இறுதி வடிவமைப்பு!

2003 ஆம் ஆண்டு கல்வி அபிவிருத்தித் திட்ட இறுதி வடிவமைப்பு நிறைவுபெற்றுள்ளது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வட-கிழக்கு மாகாணத்திலுள்ள 12 வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்த இறுதித் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

குறுகியகால, நீண்டகாலத் திட்டங்கள் ஆராயப்பட்டு, ஆண்டுத் திட்டம் வரையப்பட்டுள்ளதாகவும், இதனை உறுதியோடும் அர்ப்பணிப்புடனும் செயற்படுத்தவேண்டும் எனவும் வட-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகள், வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



கிளிநொச்சியில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி திட்டமிடல் செயலமர்வில் பங்குபற்றியோரில் ஒரு தொகுதியினரைப் படத்தில் காணலாம்.

## துணிச்சலான செய்திகளை வெளியிட்டோருக்கு விருது!

### விண்ணப்பங்களை அனுப்பலாம்

தமிழ் ஊடகவியலாளரில் நெருக்கடி காலத்தில் திறமையாகச் செயற்பட்டவர்களையும் துணிச்சலான செய்திகளை வெளியிட்டவர்களையும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கொழும்பில் கௌரவிக்கப்போவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

தகுதியானவர்களை அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறும் இதற்கான விண்ணப்பப்படிவத்தை யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர்கள், யாழ்ப்பாண இந்துசமய அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (09)

## வீதி விபத்துக்களில் அறுவர் படுகாயம்

யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி அறுவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ராமு முருகேசு (வயது 70) என்பவர் வலது கால் முறிவடைந்தநிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் சந்தி உப்புமடப் பிள்ளையார் ஆலயப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சிக்கி மயக்கமடைந்த நிலையில், சுப்பிரமணியம் இந்திரகுமார் (வயது 23), சிறிகரன் ராஜ்கரன் (வயது 21) ஆகியோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நவாலிப்பகுதியில் மோட்டார் சைக்கிளின் குறுக்கே நாய் புகுந்ததில் இடதுகை முறிவடைந்த நிலையில் மகாதேவராஜா மதனமோகன் (வயது 27) என்ற மூளாய் வாசியும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)

## ஜே.வி.பியுடனான கூட்டணி ஆரம்பக் கட்டத்திலேயே!

### சமாளிக்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

ஜே.வி.பியுடனான சுதந்திரக் கட்சியின் கூட்டணி குறித்து, இப்போது ஆரம்பக் கட்டப் பேச்சுக்களே நடக்கின்றன. இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றை ஜனாதிபதி சமாதானப்படுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா, தற்போதைய சமாதான முயற்சிகளுடன் தனது கொள்கைகள் ஒத்துப் போகவில்லை எனவும், அரசின் இந்தச் சமாதான முயற்சி தொடருமேயானால் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு அரசாங்கம் கேட்டதாகவும், ஆனால், இந்தப் பேச்சுக்களில் தனக்கு உடன்பாடு இல்லாததால் பிரதிநிதியை நியமிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்துப் பேச்சுக்களின்மூலம் உண்மையான சமாதானம் கிடைக்கும் எனத்தாம் நம்பவில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பொங்கல் விழாவில் பண்டைய விளையாட்டுக்கள்

(யாழ்ப்பாணம்).

எதிர்வரும் 26 ஆம் திகதி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவிருக்கின்றன.

கிளித்தட்டு, கயிறிழுத்தல், முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல் ஆகிய போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெற்றிபெறும் கழகங்களுக்கும் வீரர்களுக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் பொங்கல் விழாவில் வழங்கப்படவுள்ளது.


## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் :- 26.01.2003 ஞாயிறு காலை 9 மணி.
இடம் :- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்.
தலைமை :- மன்றத் தலைவர்.

நிகழ்ச்சி நிரல் :-

01. இறை வணக்கம்.
02. வரவேற்புரை.
03. தலைமையுரை.
04. சென்ற கூட்ட அறிக்கை.
05. செயற்பாட்டறிக்கை.
06. கணக்கறிக்கை.
07. சிறப்பு விருந்தினர்கள் உரை.
08. புலமைப் பரிசில் வழங்கல். (அமரர் நமசிவாயம் நினைவாக)
09. நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு.
10. நன்றியுரை.

* மன்றின் விடயமாக பிரேரணைகள் இருந்தால் 20.01.2003ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும். மன்றின் விசேட நிர்வாகக் கூட்டத்தில் விடயம் ஆராயப்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்காக.
* உரிமையாளர்கள் மட்டும் (மன்றின் அங்கத்தவர்கள்) தவறாது கலந்துகொள்ளவும்.
* பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும், அரச உயர் அதிகாரிகளும், அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் கலந்துகொள்வார்கள். எமது எதிர்கால நடவடிக்கை சம்பந்தமாக (எமது பேரழிவு) தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரவும்.
* 2002ஆம் ஆண்டின் அங்கத்துவத்தை உறுதி செய்ய 25.01.2003 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது

DR.சு.கி.அருளானந்தம்,
செயலாளர்.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(சி-486)



## சிறு விளம்பரம்

### ஆங்கிலம்

பல வருடங்கள் உயர்கல்வி நிலையங்களில் கடமைபுரியும் ஆங்கில ஆசிரியரினால் A/L 2003 ENGLISH PAPER CLASS. ஆரம்பம் தை 15 இல். தொடர்பு: 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (100)

### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப்போடு தல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.(சி-439)

நிரஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்று மட்டும்
உன்னை நினைத்து
நாளை முதல்
என் மன வானில்
(சி/397)

ராஜா யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌந்திரி, வடிவேல், மணிவண்ணன்
சுந்தரா டிராவல்ஸ்
10.30, 2.30, 6.00
நாளை முதல்
விஜய், ஸ்நேகா
வசீகரா
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளவும்.
(சி-398)



## கலாலயா

### பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும்
6 மாத டிப்ளோமா பயிற்சிநெறி

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- பூ வேலை
- கைவேலை
- உடை தயாரித்தல்
- FABRIC PAINTING

❖ மேற்படி பயிற்சிகள் அனைத்தையும் பயில்வோருக்குக் கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் என்பன இலவசமாகப் பயிற்றுவிக்கப்படும்.
❖ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
❖ இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

கிழமை நாள் பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பி.ப. 1.30 மணிவரை
திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் நடைபெறும்.
ஆரம்பம்: 20-01-2003

சனி, ஞாயிறு பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறும்.
ஆரம்பம்: 19-01-2003

மேலும் விபரங்களை பிற்பகல் 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

- இயக்குநர்.

(சி-476)


## இன்றைய நாள் இனிய நாள்

### 14-01-2003 - செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- மனமகிழ்ச்சி, அதிக நன்மை, புத்திரரால் பெருமை, உற்சாகம். |
| இடபம் | :- அயலவரால் இடையூறு, அவமானம், தேகசுகக் குறைவு. |
| மிதுனம் | :- நாரிநோவு, அந்நியர் உதவி, சகோதரரால் நன்மை, பொருள் வரவு. |
| கர்க்கடகம் | :- இரத்தக் காயம், இனசன விரோதம், வாகன லாபம். |
| சிங்கம் | :- உடற்சோர்வு, வீண்பழி, பணச் செலவு, மனக்கிலேசம். |
| கன்னி | :- இனசனத்தால் உதவி, குடும்ப சிறப்பு, மனச் சந்தோஷம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- தானதருமம் செய்தல், உடல் மெலிவு, காரிய விக்கினம். |
| விருச்சிகம் | :- குடும்ப சுகம், நன்மதிப்பு, சகோதரருக்குக் கேடு. |
| தனு | :- பொருட்செலவு, அலைச்சல், காரிய வெற்றி. |
| மகரம் | :- வாகன பயம், ஆரோக்கியம், தொழில்சிறப்பு, குடும்ப சுகம். |
| கும்பம் | :- சந்தோஷம், பொருள் வரவு, அந்நியர் உதவி, குடும்ப சிறப்பு. |
| மீனம் | :- பெரியோர் மதிப்பு, பொருளாதார முன்னேற்றம், இல்லச் சிறப்பு. |

# உலகவங்கியின் துணைத்தலைவர் புனரமைப்பு பற்றி நேரில் ஆராய்வு!

## ஆறுநாள் விஜயமாக நேற்று கொழும்பு வந்தார்

(கொழும்பு)

உலக வங்கியின் தென்னாசியப் பிராந்தியத் உதவித் தலைவர் டாக்டர் மீக்கோ நிஷிமிசு ஆறுநாள் விஜயமாகக் கொழும்புக்கு வந்துள்ளார்.

வட - கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான முக்கிய கலந்துரையாடல்களை இவர் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்றுக் கொழும்பை வந்தடைந்த இவர் கிளிநொச்சிக்குச் சென்று, வட - கிழக்கு அவசர புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்திக்கான செயலகத்துக்கும் செல்லவுள்ளார் . அங்கு செயலகத்தின் அதிகாரிகளுடன், வட - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர மனிதாபிமானப் பணிகள் குறித்தும் கலந்துரையாட உள்ளதுடன், அது தொடர்பாக நேரடியாக அவதானிக்கவுள்ளார்.

தென்னாசியப் பிராந்தியத்துக்கான உலகவங்கியின் துணைத் தலைவர் மீக்கோ நிஷிமிசு எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் வந்து இங்குள்ள நிலைமையை அவதானிக்கவுள்ளதுடன்,

கொழும்பில்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் கே. என்.சொக்ஸி ஆகியோரைச் சந்திக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இவர் நேற்று மாலை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா, நாளை காலை 5.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து காலை 7.30 மணிக்கு பண்பாட்டுவிழா இடம்பெறும். (லி)

## கவுணாவத்தைக்கு பக்தர்களை செல்ல அனுமதி

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் நாளை புதன் கிழமை தைப்பொங்கல் விழாவும் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றது. அடியார்கள் சேந்தாங்குளம் சோதனைச்சாவடியூடாக காலை 9 மணி முதல் ஆலயத்திற்கு செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக மீண்டும் ரவூப் ஹக்கீம் தெரிவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கட்சியின் அதியுயர் பீடத்துக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் 18 வது பேராளர் மாநாட்டிலேயே இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

கட்சியின் தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் பிரதிச் சிரேஷ்ட தலைவராக எ.எல். அப்துல் மஜீத்தும், செயலாளர் நாயகமாக எம்.ரி. ஹசன் அலியும், தேசியப் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹாரீசும், தேசிய அமைப்பாளராக கே.ஏ.பாயிசும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வட - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களவர்களை மீளக்குடியமர்த்துக

### ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகஜர்

(கொழும்பு)

வட -கிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீளக்குடியமர அனுமதிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வட-கிழக்கு சிங்கள அமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து இவ்வமைப்பின் பிரநிதிகள் இது தொடர்பான மகஜரை நேரடியாகக் கையளித்தனர். இந்த மகஜரின் பிரதி பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து 36 ஆயிரத்து 519 சிங்களவர்களும், முல்லைத்தீவிலிருந்து 59 ஆயிரத்து 21 சிங்களவர்களும், மன்னாரிலிருந்து 13 ஆயிரத்து இரண்டு பேரும, வவுனியாவிலிருந்து 11 ஆயிரத்து 643 பேரும், திருமலையிலிருந்து 51 ஆயிரத்து 699 சிங்களவர்களும், மட்டக்களப்பிலிருந்து 17 ஆயிரத்து 903 சிங்களவர்களும், இடம்பெயர்ந்துள்ளதாக வட-கிழக்கு சிங்கள அமைப்பு தனது மகஜரில் கூறியுள்ளது.

இவர்கள் உடனடியாக மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு அம்மகஜர் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவை வட-கிழக்கு சிங்கள அமைப்பு கேட்டுள்ளது.

## அடிப்படை மனித உரிமை மீறல் ஐ.நா. ஏற்பாட்டில் களநில ஆய்வு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் குறித்து களநிலையிலான ஆய்வு ஒன்று செய்யப்படவுள்ளது.

மேற்படி களநிலை ஆய்வை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியுதவியை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்ட அமைப்பு வழங்கவுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது.

அடுத்தவாரம் இச்செயற்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (க)

## 77 சத வீதமான சிங்கள மக்கள் மீள்குடியமர்வை விரும்புகின்றனர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்து இலங்கையில் உள்ள 77 சதவீதமான தமிழ் மக்கள் அறிந்து வைத்திருப்பதாக, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இவர்களில் 60 சதவீதத்தினர் சமாதானப் பேச்சுக்கள் குறித்து திருப்தி தெரிவித்திருக்கின்றனர்.

கருத்துக்கணிப்பில் கலந்து கொண்ட 77 சதவீதமான சிங்கள மக்கள் வட-கிழக்குப் பகுதிகளில் உடனடியாக மீள்குடியமர்வு இடம்பெறவேண்டும் எனக்கூறியுள்ளனர்.

## தைப்பொங்கலை முன்னிட்டு சூடுபிடிக்கும் பட்டாசு வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் தைப்பொங்கலை முன்னிட்டுப் பட்டாசு வியாபாரம் அமோகமாக நடைபெற்று வருகின்றது.

அண்மையில் முனியப்பர் ஆலயவீதி, நடைபாதை வியாபாரக் கடைகளில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தப்பட்டிருந்த பட்டாசுக் கடைகள், தற்பொழுது வியாபாரம் சூடுபிடித்ததையடுத்து, ஏனைய கடைகளுக்கு அருகிலும் அமைக்கப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களின் பின்னர், பட்டாசுச் சத்தத்துடன், அமைதியான சூழநிலையில் தைப்பொங்கல் விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக வங்கி மூலமான உதவி ஆப்கானின் முன்மாதிரியாம்

இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைக்கான நிதியைக் கையாளும் ஏற்பாடு- ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் நடைமுறையில் இருந்ததாகத் தெரியவருகின்றது.

யுத்தம் முடிந்த நாடுகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஆப்கானிஸ்தானில் கையாளப்பட்ட நடைமுறைமையே இலங்கைக்குப் பொருத்தமானது எனத் தெரிவு செய்யப்பட்டது.

உலக வங்கியில் நிதியுதவிகளை வைப்பிலிட்டு, அபிவிருத்தி, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதென்பதே இந்த நடைமுறையாகும்.

இதன்படி கிளிநொச்சியிலுள்ள 'சிறான்'அலுவலகமே அனைத்து புனர்வாழ்வு புனரமைப்புச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருக்கும் என்றும், திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்காமலேயே உலக வங்கியிடம் இருந்து நிதியைப் பெற்று வேலைத் திட்டங்களை நிறைவேற்றலாம் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, உலகவங்கி 'சிறான்' அமைப்புக்கு சில வேலைத திட்டங்கள் தொடர்பான வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை மட்டும் வழங்கும் என்றும் தெரியவருகின்றது.

## 29 வது தேசிய விளையாட்டு விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

29 வது தேசிய விளையாட்டு விழா இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும யாழ்ப்பாண மக்களின் வேணடுகோளுக்குக்கிணங்க இந்தத் தீரமானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் டன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

விளையாட்டில் பங்குபற்றும் குழுக்களின் தங்குமிட வசதிகளை ஆராய்வதற்காக இம்மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாகவும் -

யுத்த நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டின் விளையாட்டுத்துறையை இதன் மூலம் மேம்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 79 மில்லியன் ரூபா செலவில் திருமலையில் நீதிமன்றத் தொகுதி

### நாளை அடிக்கல் நாட்டப்படும்

(திருகோணமலை)

திருகோணமலையில் 79 மில்லியன் ரூபாய் செலவில் 4 மாடிகளைக் கொண்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு உலக வங்கி நிதியுதவி அளித்துள்ளது.

150 வருடகால பழைமையான திருமலை நீதிமன்றம் இன்னும் இரண்டு வருடங்களில் நவீன மயமானதாக மாற்றியமைக்கப்படும். இப்புதிய கட்டடத் தொகுதியில் 2 உயர் நீதிமன்றங்களும், 1 மாவட்ட நீதிமன்றமும், 2 நீதிவான் நீதிமன்றங்களும், ஒரு தொழில் பிணக்கு நீதிமன்றமும் அமைக்கப்படவுள்ளன.

நாளை புதன்கிழமை காலை 9.48 மணிக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வா புதிய கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் லினை நட்டுவைப்பார்.

இது போன்று யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதியினை அமைப் பதற்கு 92 மில்லியன் ரூபாய்களை உலகவங்கி வழங்கியுள்ளது. (04)

## பெரும் நிதிச் செலவீடுகளையே உலக வங்கி கண்காணிக்கும்

(கொழும்பு)

வட-கிழக்கு புனர்வாழ்வுப் பணிகளுக்கான நிதியைக் கையாள்வதற்கான விடயத்தில் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாகச் செயற்படவிருக்கும் உலகவங்கி- இரண்டரை லட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான செலவீட்டுடனான திட்டங்களையே நேரடியான கண்காணிப்புக்கு உட்படுத்தவுள்ளது.

இதற்குக் குறைவான செலவீட்டுடனான திட்டங்கள் - அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் தனியான கண்காணிப்பு பொறிமுறையினாலேயே **(Separate Monitoring Mechanism)** - கண்காணிக்கப்படவ்ுள்ளன.

இது தொடர்பாக - தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

## துணைவேந்தர் பெப்ரவரியுடன் ஓய்வு!

(மானிப்பாய்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகக் கடந்த ஆறு வருடங்களாகப் பணியாற்றி வந்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் பதவிக்காலம் அடுத்த பெப்ரவரி மாதத்துடன் முடிவடைகின்றது.

எனவே, துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கோரியுள்ளார். இப்பதவிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (100)

# நாகர்கோவில் வீதி திறக்கப்பட்டால் தான் வடமராட்சி கிழக்கின் கல்விச் சூழல் வளரும்

## மாவீரர் பெயர்ப்பட்டியல் திரைநீக்க நிகழ்வில் உரை

(பளை)

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் அப்பாடசாலையில் கல்வி கற்று மாவீரர்களானவர்களின் பெயர்ப்பட்டியல் பாடசாலை முன் சுவரில் பதிக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. இப்பெயர்ப்பட்டியலில் இப்பிரதேசத்தைச் சேர்ந்து 42 மாவீரர்களது பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இப்பெயர்ப்பட்டியலைத் திரைந்க்கம் செய்து வைத்து உரையாற்றிய வடமராட்சி கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தனது உரையில், "இம்மாவீரர்களது தியாகத்தால்தான் நாம் இம்மண்ணில் இன்று இப்பாடசாலையை இயங்க வைத்துக்கொண்டிருக்கின்றோம். இம்மண்ணில் எம்மை இன்று நிமிர்ந்து நிற்க வைத்த மாவீரர்களது பெயர்ப்பட்டியலை திறந்து வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன்" என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட வடமராட்சி கிழக்குக் கல்விக்கழக பொறுப்பாளர் தாயகன், "இம்மாவீரர்களது தியாகத்தால் தான் மீண்டும் எமது கல்விச்சூழல் இயங்க ஆரம்பத்துள்ளது. இந்த சமாதானச் சூழல் இன்னும் நீடிக்க வேண்டும். அதற்கு அரசு இம்மாவீரர்களது தியாகத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

மேலும், நாகர்கோவில் வீதி திறக்கப்பட்டால்தான் இங்கு கல்விச் சூழல் வளரமுடியும். ஆசிரியர்கள் காலதாமதமின்றிப் பணிக்கு வர முடியும். எனவே, நாகர்கோவில்ப் பாதை திறக்கப்பட்டு அப்பிரதேசத்திலும் மக்கள் குடியேற ஆவன செய்ய வேண்டும்" என்றார்.

பாடசாலை அதிபர் மா.நவநீதமணி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் இம்மாவீரர்களது பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(115)

# முதலாவது சமுர்த்தி வங்கி மருதங்கேணியில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதல் கட்டமாகப் பன்னிரண்டு சமுர்த்தி வங்கிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

முதலாவது சமுர்த்தி வங்கி மருதங்கேணியில் எதிர்வரும் பதினெட்டாம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. ஏனைய இடங்களில் படிப்படியாக வங்கிகள் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது.

வங்கிகளுக்குத் தேவையான இரும்புப் பெட்டிகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

(க)

# பட்டப்பின் படிப்புப் புலமைப்பரிசில் ஐந்து பேருக்கு இந்தியா வழங்கும்

(நாயன்மார்கட்டு)

இந்திய பொதுநலவாயப் பட்டப்பின் படிப்பு 2003/2004 புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் - பட்டப்பின் படிப்புக்கான ஐந்து புலமைப்பரிசில்களை இலங்கை மாணவர்களுக்கு வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

புலமைப்பரிசில் பெறுவோருக்கான போக்குவரத்து மற்றும் செலவுகள் அனைத்தும் இந்திய அரசினால் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் முதல் அல்லது இரண்டாந்தர பட்டத்தைப் பெறறிருப்பதுடன் 35 வயதிற்கு குறைந்தவர்களுக்கு முன்னுரிமையும் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் உயர்தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்கவேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து- செயலாளர், மூன்றாம் நிலைக்கல்வி பயிற்சி அமைச்சு, உயர்கல்விப் பிரிவு, 18 வாட் பிளேஸ், கொழும்பு - 07 எனும் முகவரிக்கு - இம் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி - மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(61)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

(நேற்றையதினம் பிறந்தநாளைக் கொண்டாடிய)

முதலாவது அகவையில்.




பெயர் : சு.பரணிதரன்
முகவரி: களபூமி,
காரைநகர்.

மூன்றாவது அகவையில்.



பெயர் : வ.சானுகேசன்
முகவரி: மகாத்மா வீதி,
நெல்லியடி,கரவெட்டி.

ஆறாவது அகவையில்.



பெயர் : தே.சஜீவன்
முகவரி: வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.

எட்டாவது அகவையில்.



பெயர் : வ.சஞ்சய்
முகவரி: வாகையடி ,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------------
பெற்றார் ஒப்பம்


# நெசவு விற்பனை நிலையப் புனரமைப்பு தொழிற் திணைக்களம் நிதி ஒதுக்கீடு

(மானிப்பாய்)

யாழ்.குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களால் சேதமாக்கப்பட்டு, சிதைவடைந்துள்ள நிலையில் இருக்கும் தொழிற் திணைக்களத்தின் நெசவு நிலையம் மற்றும் விற்பனை நிலையத்தைப் புனரமைத்து செயற்பட வைப்பதற்காக சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா் நிதியினை, வடக்கு-கிழக்கு மாகாண தொழிற்திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பண்ணாகம் நெசவு நிலையப் புனரமைப்புக்கு 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆரியகுளம் தொழிற்துறை விற்பனை நிலையப் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(100)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மருதங்கேணி கோட்ட பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(பளை)

மருதங்கேணி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுக்கும் தறகாலிக கொட்டகை அமைக்க கிளிநொச்சி கல்வி வலயம் நாலரை இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

(115)

### சங்கானை கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மத்தி கிராம அலுவலர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண கூட்டம் எதிர்வரும் 19ம் திகதி பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் சங்கானை மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறும் அப்பகுதிக் கிராம அலுவலர் அறிவித்துள்ளார்.

### குளங்கள் புனரமைக்கப்படும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருகுளங்கள் உலக உணவு உதவித்திட்டத்தின் கீழ்ப் புனரமைக்கப்படவுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள- மருதங்கேணி நெல்லியான் குளமும் குடத்தனையிலுள்ள ஈச்சிலம் பற்றைக்குளமும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் புனரமைககப்படவுள்ளன.

(17)

# குடிநீருக்காக அலையும் புலோப்பளை மக்கள்

(சரசாலை)

புலோப்பளைப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள், குடிநீர் பெறுவதற்காகத் தினமும் இரண்டு மைல்களுக்கு அப்பால் செல்லவேணடியுள்ளது.

இப்பகுதியில் பளைப் பிரதேச சபையினரால் மூன்று குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு மக்கள் சிரமமின்றி குடிநீரைப் பெறமுடிந்தது. ஆனால், கடந்தகால யுத்தத்தினால் இக்குழாய்க் கிணறுகள் சேதமடைந்தமையால் -

இப்பகுதி மக்கள் அல்லிப்பளை, பளை ஆகிய பகுதிகளுக்குச் சென்றே குடிநீரை எடுத்துவரவேண்டிய நிலை உள்ளது.

சேதமடைந்துள்ள குழாய்க் கிணறுகளைத் திருத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வடமராட்சி கிழக்கில் தனியான பிரதேசசபை

## அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(பளை)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனியான பிரதேசசபை அமைக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பிரதேசம் பருத்தித்துறை பிரதேசசபையுடன் இணைதது நிர்வகிக்கப்படுகின்றது. இதனால் வளப்பகிர்வின் ஒரு பகுதி மாத்திரம்தான் தமக்குக் கிடைக்கின்றது என்றும், தனியான பிரதேச சபையாக அமைக்கப்பட்டால் தமது பிரதேசத்தை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(115)

# ஆனையிறவில் மிதிவெடிகள் தினமும் சிக்கும் கால்நடைகள்


ஆனையிறவு, உப்பளம் பகுதிகளில் நான்கு தினங்களில் மட்டும் சுமார் 12 கால்நடைகள் மிதிவெடிகளில் சிக்கி படுகாயமடைந்தோ அல்லது இறந்தோ உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் முதல் ஓமந்தை வரையிலான ஏ-9 பாதையைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 800 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ள போதிலும், இவ்வீதியின் அருகில் காணப்படும் வெடி பொருட்களை அகற்ற எவ்வித நிதியுதவியும் இது வரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதிப் புனரமைப்பு தைப் பொங்கல் தினத்தன்று ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.


# பற்றீரியா தாக்குதலில் கரண்டி மூக்கன்கள் மரணம்





கறுப்புத்தலைக் கரண்டி மூக்கன் **(Black Faced Spoon bills)** எனும் அரிய பறவையினம் 'ஏவியன் பொட்டுலிசம்' எனும் கொடிய நோய்க்குப் பலியாகிவருகின்றது. கடந்த வருடம் இத்தகைய 71 பறவைகள் தாய்வானில் இறந்துள்ளன. உலகில் இத்தகைய பறவைகள் 969 மட்டுமே இன்று உள்ளன.

குளோஸ்ரிடியம் பொட்டுலினம் என்ற ஒரு வகைப் பற்றீரியாவின் நஞ்சு, நீர் நிலைகளில் கலப்பதே இந்த மரணங்களுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இப்பறவையினங்கள் தாய்வான், சீனா, ஜப்பான், கொரியாப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன.




# படமும் செய்தியும்



இஸ்ரேலில் இருந்து தருவிக்கப்படும் விசேட களிமண் கொண்டு தனது நாயைக் களிமண் சிகிச்சைக்கு உட்படுத்தும் ஜப்பானியப்பெண். களிமண் சிகிச்சை, நாயின் தோலையும் மயிரையும் பாதுகாப்பதாக நம்பப்படுகிறது.


பிரபல டெனிஸ் வீரர் ஆன்ட்ரூ அகாஸியின் மனைவியும் முன்னாள் பிரபல டெனிஸ் வீராங்கனையுமான ஸ்ரெபி கிராப் தனது மகன் ஜேடன் கில் உடன் தனது கணவரின் டெனிஸ் பயிற்சியைப் பார்வையிடுகிறார்.



# நுண்ணிய புகைப்படக் கருவி மட்டுமல்ல..






பெரிய புகைப்படக்கருவிகள் சிறிய புகைப்படக்கருவிகளாகி, அவை மிகச் சிறியவையாகக் காலப்போக்கில் உருமாறின. இப்போது, மேலும் சிறிய அளவில் புகைப்படக்கருவிகளைப் பனசோனிக் நிறுவனம் உற்பத்தி செய்கிறது. கையடக் கமான - உள்ளங்கைகளில் - அடங்கக் கூடிய இப்புகைப்படக்கருவிகள், படங்கள் எடுக்கும் கருவிகளாக அல்லாமல் சி.டி பிளேயராக, டிஜிற்றல் வீடியோவாக, ஒலிப் பதிவுக் கருவியாக 4-**in**-1 ஆக செயற்படு வதுதான் ஆச்சரியம்.

இந்த ஏப்ரலில் விற்பனைக்குவரும் இக்கருவிகள் 300 அமெரிக்க டொலர் பெறுமதியான்வை.



# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

அரங்கம் 15

படம் வெளியான இரண்டு நாட்களுக்குப் பிறகு மில்ட்ரெட் ஹாரிஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் சார்லி. அவளும் அவருடைய முதல் காதலி ஹெட்டி கெல்லியைப் போலவே குழந்தைத்தனமாகப் பழகினாள்.

சார்லி பிரபலமாகவும், அழகாவும் மிகமிக செல்வந்தராகவும் இருந்ததோடு, எளிதில் காதல் வயப்பட்டவராகவும் இருந்தார். இதனால் அழகான பெண்கள் அவர் படத்தில் ஒரு வாய்ப்புக்காகவும், அவருடைய சொத்தில் பங்கு கேட்பதற்காகவும் அவரை குறிவைத்து சூழ்ந்து கொண்டார்கள்.

சார்லியின் அறிவும் மனதும் வேலையில்தான் முழ்கியிருந்தது. இதனால் அவர் எவ்வளவு விரைவில் காதல்வயப்பட்டாரோ அதேபோன்று, அதிலிருந்து வெளியேறியும் விடுவார்.

ஆரம்பத்திலிருந்தே மில்ட்ரெட்டுடனான சார்லியின் திருமண வாழ்க்கை மோசமாக இருந்தது. சார்லி சந்தோஷமற்றுப்போக, படம் எடுப்பதே அவருக்குப் பயங்கரக் கனவாகி விட்டது. இருந்தாலும், அவர் முக்கிய முடிவை எடுத்தார். உண்மையான நண்பன் என்று சார்லஸ் கருதிய டக்ளஸ்.'.பேர்பேங்ஸ், அவர் மனைவி மேரி பிக்போர்ட், திரைப்பட இயக்குநர் டி.டபிள்யு.கிரிபித் ஆகியவர்களைக் கூட்டாகக் கொண்டு, ஒரு தனி ஸ்டுடியோ ஒன்றை நிர்மாணிக்கத் திட்டம் தீட்டினார். அதற்கு 'யுனைடெட் ஆர்ட்ரிஸ்ட்' என்று பெயரிடவிருந்தார்கள்.

இதற்குள் சார்லியும், மில்ட்ரெட்டும் தங்கள் முதல் குழந்தையை எந்த நேரத்திலும், எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தோல்வியுற்று வந்த மணவாழ்க்கையைப் புதிய வரவு சீர் செய்து, காப்பாற்றும் என்று சார்லி நினைத்திருந்தால், அது கோரமான முறையில் தவறானது. 1919 ஜூலை ஏழாம் நாள், நார்மன் ஸ்பென்ஸர் என்ற ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் மில்ட்ரெட். ஆனால் அந்தக் குழந்தை மூன்றே நாட்கள்தான் உயிரோடு இருந்தது. சார்லி மனமொடிந்து போனார்.

அந்த சோகத்தை எதிர்கொள்ள அவருக்கு ஒரு வழிதான் இருந்தது. 'த கிட்' என்ற புதிய முழுநீளப்படத்தை உருவாக்கும் வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார்.

படத்தின் பெயரில் வரும் சிறுவனாக நடிக்கச் சார்லிக்குச் சரியான நடிகன் கிடைத்தான். நான்கு வயது 'ஜாக்கி கூகன்'. லயாப்பில் நடனமாடும் ஜாக்கியின் தந்தையின் நடனத்தை ஒரு மேடையில் பார்த்தார் சார்லி. காட்சியின் முடிவில் அவர் தனது மகனை மேடைக்கு அழைத்து வந்தார். சிறு வயதில் சார்லி செய்தது போலவே, ஜாக்கியும் திறமையாகத் தன் அப்பாவைப்போல நடனமாடி அரங்கத்தை ஆரவாரத்துக்குள்ளாக்கினான். ஜாக்கியின் குடும்பம் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று அவர்களைச் சந்தித்தார் சார்லி. (அடுத்த அரங்கில் தொடரும்)

# திரை விமர்சனம்




உலகில் கடற்படையைக் கொண்ட ஒரேயொரு விடுதலைப்படையாக விடுதலைப்புலிகள் மிளிர்ந்துள்ள யதார்த்தம் இத்திரைப்படத்தைப் பார்க்கும் ஒவ்வொரு பார்வையாளனுக்கும் ஏற்படும். இது உண்மையில் தமிழர்கள் பெருமைப்படக்கூடிய விடயம் என்ற ஓர் மனோநிலை திரைப்பட முடிவில் ஒவ் வொருவரினதும் மனங்களிலும் நிச்சயம் ஏற்படும்.

கடலோரக்காற்றுத் திரைப்படத்துக்கு மெருகூட்டுவது கிருபாவின் ஒளிப் பதிவுதான். மிக அழகான முல்லைத்தீவு கடலோரக்கிராமம் ஒன்றை தனது கமெரா மூலம் நேர்த்தியாகவும் பிரமிப்பூட்டும் வகையிலும் உள்வாங்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் கிருபா. அழகிய கடற்கரை, கடற்கரையின் வெண்மணல், கரையோரக்கிராமம், மீனவர்களின் வாழ்வு என மிகத் தத்ரூபமாக அவரின் கமெரா சுட்டுத் தள்ளியிருக்கின்றது. கடற்சண்டையிலும் ஒளிப்பதிவு பாராட் டத்தக்க வகையில் அமைந்திருக்கின்றது.

ந.கேசவராஜனின் கதை இத்திரைப்படத்தில் இரண்டு கோணங்களில் நகர்த்தப்படுகிறது. ஒன்று கரையோரக் கிராமம் ஒன்றில் மக்களிடையே காணப் படும் ஏற்றத்தாழ்வுகள்,மற்றையது கடற்புலிகளின் மனநிலைகள், கடற்போர் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு நகர்கின்றது.

சாதாரண எம்மக்கள் வாழ்வில் காணப்படும் காதல், குடும்பச்சச்சரவுகள், ஏற்றத்தாழ்வு என்பன மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றன. இப்படத்தில் பாத்திரமேற்று நடித்த நடிகர்கள் சிறப்பாகத் தமது திறமையை வெளிப்படுத்தி யுள்ளனர். கடற்புலிப் போராளிகளும் சாதாரணமாக இளைஞர்களுக்கு இருக்கும் குறும்புகளும் கும்மாளங்களும் கொண்டவர்கள்தான் என்பதைக் கடலோரக்காற்று வெளிப்படுத்துகின்றது. இறுதியில் கரும்புலியாக மாறும் அந்தப்போராளி இளைஞ னின் நடிப்பும் பாராட்டும்படியாக உள்ளது. அடிக்கடி 'பசிக்குது' என்று கூறி சகாக்களிடம் திட்டு வாங்கும்போதும் சரி, திருட்டுத்தன மாக பெண்போராளிக ளின் ஆட்டைத் திருடிவந்து கறிசமைத்து இறுதியில் அதை நாய்க்கே இழந்துவிட்ட நிலையில், நாயைத் துரத்திச் செல்வதிலும் சரி, அவரின் அப்பாவித்தனமான நகைச்சுவை, பார்வையாளர்களை நகைக்கவைக்கிறது. நண்பர்களைப் போரிலிழந்து- ஆவேசத்துடன், தானே கரும்புலியாக எதிரியை வெடிமருந்து படகு மூலம் சிதைக்க புறப்படும் முன், புன்னகைத்தபடி புறப்படும் இறுதிக்காட்சி மனதைக் கலங்கடிக்கின்றது.

கடலோரக்காற்றில் கவிஞர் நாவண்ணனின் பாடல் வரிகளும் அதற்குச் றப்பான இசைவழங்கிய இசைப்பிரியனும் மறக்கப்பட முடியாதவர்கள். கடற்ச் சண்டைக்காட்சிகளில் கடற்படையின் டோராப்படகுபோன்றும் கடற்புலிகளின் படகுகளையும், புலிகளின் படகுக்கட்டுமானப் பகுதியினர் மிகக்கச்சிதமாதமாகச் செய்துள்ளனர்.

இத்திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியமைப்பும் குறுகியதாக இராமல் நீண்டு காணப்படுகின்றது. திரைப்படம் சில சந்தர்ப்பங்களில் நாடகத் தோற்றத் தைக் காண்பிக்கவும் செய்கிறது. படத்தொகுப்பு இன்னும் சிறப்பாகச் செய்தி ருக்கலாம். இருந்தாலும்- நிதர்சனம் நிறுவனத்தின் கடலோரக்காற்று, வளங்கள் குறைந்த நிலையிலும் இப்படியும் சிறப்பாகப் படமெடுக்க முடியும் என்பதை உரத்துச் சொல்கின்றது.

-துஷி




# கடியும் மருந்தாகிறது

இரத்தம் உறிஞ்சும் வௌவால்களின் (Vampire Bat) ஒவ்வொரு கடியும் எமக்கு மருந்தாகின்றது என்கின்றனர், அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள். இவ் வௌவால், தான் கடித்த பகுதியில் இரத்தம் உறையாது சுலபமாக உறிஞ்சு வதற்காக ஒரு திரவத்தை உமிழ்வதாகவும், இது பக்கவாத நோய்க்கு அருமருந்து எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த இரத்தம் குடிக்கும் வௌவாலின் உமிழ்நீரில் இருக்கும் ஒரு வகை நொதியம் மூலம் தயாரிக்கும் மருந்து, பக்கவாத நோய்க்கு நல்ல தீர்வைக்கொடுப் பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இம்மருந்துக்கு **DSPA (Desmodus rotundus Salivary Plasminogen Activator)** எனப் பெயரிட்டுள்ளனர்.





# துருவக் கரடிகள் 100 வருடங்களில் அழிந்துவிடும்

உலக வெப்பநிலை அதிகரித்து வருவதால் இன்னும் 100 ஆண்டுகளில் துருவக்கரடி, பூமியிலிருந்து முற்றாக அழிந்துவிடும் எனச் சூழலியாளர்கள் கூறுகின்றனர். ஏற்கனவே கனடாவின் ஹட்சன் வளைகுடாவில் வெப்பநிலை மாற்றத்தால் இந்த இனக்கரடிகள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றன.

துருவப்பனிப்பாறைகள் 10 வருடத்துக்கு 9 சதவீதம் எனக்கரைந்து வருவ தால், இப்பனிக்கரடிகளின் வாழ்க்கைச் சூழலும் சிதைந்து வருவதாக சூழலியலாளர்கள் கூறுகின்றனர். துருவப் பனிக்கட்டிகள் குறைந்து விடுமானால், அது பனிக்கரடிகளின் வாழ்வும் அருகிவிடுவதையே குறித்து நிற்கும்.

# ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுங்கள்

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

மற்றவரோடு நல்ல உறவை ஏற்படுத்த எமது எண் ணமும் முக்கியமானதாகும். எண்ணம் என்பது ஒருவரைப்பற்றி நாம் பார்க்கும் ஆழமான மன நோக்கமாகும். ஒரு இடத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றால் அதை வைத்துக்கொண்டே எல்லா நிகழ்ச்சி யையும் பார்ப்பர். நெட்டையர் எல்லாம் மோடர், கட்டை யர் எல்லாம் குள்ளர் என்பது பலரின் எண்ணம். இது பிழையாகும். குணங்கள் வருவது எமது சூழலா லேயே. சில நேரம் முன்பு நடந்த நிகழ்ச்சியில் கண வன் செயற்பட்ட விதத்தால் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சியிலும் இப்படித்தான் செயற் பட்டார் என எமது எண்ணத்தைக் கொண்டே தீர்மானம் எடுக்கிறோம். இப்படிப்பட்ட எண்ணங்களும் நல்ல உறவுக்குத் தடையாகின்றன.

சிலர் தமது கணவன் - மனைவி தவறுவிடும்பொ ழுது அன்றே உணர்த்துவதில்லை. அதுவும் தவறான தாகும். அதாவது, நல்ல சூழல் இல்லாததால் சொல் லாமல், நாட்கள் கடந்து செல்ல இடம் கொடுக்கின்ற னர். உதாரணமாக, கணவன் வேறொரு பெண்ணோடு தொடர்புகொண்டவர்போல் இருப்பதாகச் செய்தி கிடைக்கிறது மனைவிக்கு. வேறு பெண்ணுடன் வித்தி யாசமான தொடர்பை வைப்பது எனக்குப் பிடிக்க வில்லை என்பதை வெளிப்படுத்தாமல் இருக்கின்றாள் மனைவி. கணவன் பல நாட்களின் பின் உண் மையாகவே அந்தத் தவறில் விழுந்து விடுகிறான். செய்தி அறிந்த அன்றே அன்போடு அவனுக்கு எதிர்ப்பைக் காட்டியிருந்தால் அன்றுடன் அப்பெண்ணுடன் இருந்த தொடர்பை முறித்திருக்கலாம். காலங்கடந்த பின் கவலைப்பட்டுப் பிரயோசனமில்லை.

ஒரு கூட்டத்தில் பேச்சாளரின் உரை நன்றாக இருக் கும்போது, கைகளைத் தட்டுவதன் மூலம் பேச்சாளருக்கு உணர்த்துகின்றனர். இது வளர்ந்து செல்லும் தங்கள் அபிப்பிராயமாகும். நித்திரை தூங்கி கொட்டாவிவிட்டு கையி லுள்ள கடிகாரத்தைப் பார்ப்பதன் மூலம் குறைந்து செல்லும் அப்பிராயத்தைப் பேச்சாளருக்குக் கொடுப்பர். பேச்சாளரும் இதை உணர்ந்து தனது பேச்சை முடித்துக்கொள்வார்.



பிரதி அபிப்பிராயத்தை உணர்த்தாமல் மூடிமறைத்தால் மற்றவர் புரிந்து கொள்ளமாட்டார்.

கணவனுடைய நடமாட்டத்தில் மனைவியின் பங் குண்டு. 100:100 வீதம் கணவனுடைய நடமாட்டத்துக்கு அவரே பொறுப்பல்ல. மனைவியின் நடமாட்டத்தின் ஒரு பகுதியின் பிரபலிப்பே கணவனின் நடமாட்டமாகும். மற்றவரது நடமாட்டத்தில் எனது நடமாட்டமுண்டு. ஆகவே மற்றவரை மாற்ற நினைக்காமல் என்னை மாற்ற உற்சாகம் எடுக்க முடியாதா? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

உதாரணமாகத் திருமணம் முடித்து பத்து வருடங் கள் கழிந்த கணவன், குடும்ப ஆலோசகரிடம் ஆலோ சனை பெறச்சென்றார். மனைவியையும் அழைத்துக் கொண்டு வருமாறு ஆலோசகர் கூறினார். ஆனால், மனைவி வரமறுக்கிறாள் என்று கூறிவிட்டார்.

இருந்தாலும் மூன்று மாதங்களாக மனைவியில்லா மல் குடும்ப ஆலோசகரிடம் அவரே ஆலோசனை பெறவந்தார். ஒருநாள் குடும்ப ஆலோசகரிடம் ஓடிவந்த கணவன் ஆலோசகரை நோக்கி "இனிமேல் மனைவி வரவேண்டிய அவசியம் இல்லை. என்னுடன் உறவாகி விட்டாள்" என்று சந்தோஷத்தோடு கூறினார். இங்கே என்ன நடந்துள்ளது? 7 வருடமாக எந்தவித உடலுற வும் கொள்ளாமலிருந்த மனைவி அன்று வேலை விட்டுச்சென்ற கணவனை வீட்டில் வழக்கத்துக்கு மாறாக அன்போடு வரவேற்று உபசரித்தார். கணவனுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

-திருக்குறள்.

# நமது நோக்கு

## எண்ணமும் எண்ணிக்கையும்

உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் மக்கள் மீண்டும் குடியேறுவதற்கு ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகளை விதித்தது மாத்திரமன்றி - பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 50,000 வீடுகள்வரை வெறுமையாக இருப்பதாகவும், இவற்றில் இடம்பெயர்ந்தோர் குடியேறலாமே எனவும் ஆலோசனை வேறு இராணுவத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டது.

ஆனால், விதிக்கப்பட்ட நிபந்தனைகள் எவ்வாறு பொருத்தமற்றதோ அதேபோலவே - உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 50 ஆயிரம் வீடுகள் வரை மக்களற்று, வெறிச்சோடியிருப்பதாக இராணுவம் அறிவித்தது முற்றுமுழுதான தவறான புள்ளிவிபரமே என்பதை, யாழ். அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில், பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே மக்களற்ற வீடுகள் எதுவுமில்லையென்பதை, அரசாங்கத்திடம் அவர் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பித்த அறிக்கை தெளிவாக்கியுள்ளது.

பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே - அனைத்து வீடுகளிலும் பொதுமக்கள் குடியமர்ந்துள்ள நிலையில் - சில பகுதிகளில், குறிப்பாக யாழ். நகரக் கரையோரப் பகுதிகளில் - ஒவ்வொரு வீட்டிலும் 2, 3 குடும்பங்கள் மிகுந்த நெருக்கடிக்குள் வாழ்ந்து வரும் நிலையில் - எவ்விதத்திலும் உண்மையற்ற புள்ளிவிபரங்களை வெளியிட்டு நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள இராணுவம் முயன்றது, இதனால் வெட்டவெளிச்சமாகியுள்ளது.

அரசாங்க அதிபரின் இந்த உத்தியோகபூர்வ அறிக்கையின் மூலம் - அதியுயர் பாதுகாப்பு வலயத்தைத் தனது படைநலனுக்காகத் தக்க வைத்துக் கொள்வதற்கு எத்தகைய தவறான தகவல்களையும் வெளியிடுவதற்கு இராணுவம் தயாராக இருந்ததும் அம்பலமாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது - அவ்வாறு வீடுகள் வெறுமையாக இருந்தாலும்கூட, அந்த வீடுகளில் இடம்பெயர்ந்தோரைச் சென்று குடியமரச் சொல்வதற்கு இராணுவத்தரப்பிடம் எந்த தார்மீகமான அதிகாரமும் கிடையாதென்பதும் முக்கிய விடயமாகின்றது.

தமது சொந்த வீடுகளுக்கு மக்கள் திரும்பவே தடைவிதிக்கும் படையினர் - உரிமையேயில்லாத, வேறொருவரது வீடுகளில், அவர்கள் குடியேறலாம் என ஆலோசனை சொல்வது - நகைப்புக்கிடமான கருத்தாகவேயுள்ளது.

அதேவேளை -

பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 3,500 வீடுகளிலும், 52 கடைகளிலும் படையினர் தங்கியிருப்பதாகவும் அரசாங்க அதிபர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் - பாதுகாப்பு வலயம் மாத்திரமல்ல, அதற்கு வெளியேயும் - தனிப்பட்டோரது பெருமளவு சொத்துக்கள் இராணுவத்தின் வசமிருப்பது தெளிவாகியுள்ளது.

எனவே -

இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றத்திற்கு பாதுகாப்பு வலயத்திற்குள் மட்டுமல்லாது, அதற்கு வெளியேயும் இராணுவம் பெருந்தடையாக இருப்பதை அரசாங்க அதிபரே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இந்த வகையில் - மக்களிடையே சுமுகநிலையை மீண்டும் தோற்றுவிப்பதற்கு முக்கியமான தடைக்காரணியாக இராணுவத் தரப்பு இருப்பதும் அரசாங்கத்திற்கு அதிகாரபூர்வமாக, அரச பிரதிநிதியாலேயே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவே,

இதன் பின்னராவது - யாழ்.குடாநாட்டில் மீண்டும் இயல்புநிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என உறுதியாக அரசாங்கம் நினைக்குமானால் - இந்த இராணுவப் பிரசன்னங்களை அகற்றி, தாய்லாந்தில் எட்டப்பட்ட முடிவுக்கமைய மீள்குடியமர்வைத் தடையின்றி மேற்கொள்ள வேண்டும்.

இந்நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் பின்னடிக்க அல்லது தாமதம் செய்யமுயலுமானால், சமாதானம் பற்றி உரத்துச் சொல்லும் தனது நிலைப்பாட்டிலிருந்து, நியாயப்பாட்டிலிருந்து வழுவிய குற்றம் அரசாங்கத்தைச் சேர்வது தவிர்க்கமுடியாததாகி விடும்.

# இலங்கை அமைதி முயற்சிக்கு ஜப்பான் அரசியல், பொருளாதார ரீதியில் உதவலாம்!

### அகாஷியைச் சந்தித்த பின்னர் பாலா பேட்டி

(பாங்கொக்)

இலங்கையின் சமாதான விடயத்தில் ஜப்பான் இரண்டு வகையான உதவிகளைச் செய்ய முடியும் என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

யசுஷி அகாஷியுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர்,

ஜப்பானிய இலங்கை சமாதான முயற்சிகளில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உதவமுடியும்.

அரசியல் இணக்கப்பாட்டுக்கும் ஜப்பானிய பொருளாதார உதவிகள் உதவும். இந்தப் பொருளாதார உதவிகள் போரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்குப் பகுதிகளுக்கு மட்டுமன்றி தென்பகுதிக்கும் தேவைப்படுகின்றது.

இந்தப் பொருளாதார உதவிகள் மூலம் சமாதான முயற்சிகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் எனத் தெரிவித்த அன்ரன் பாலசிங்கம், தாம் லண்டனுக்குச் சென்று விட்டு இம்மாத இறுதியில் வன்னிக்குத் திரும்பிச் செல்லலாம் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் மற்றும் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடையோருடன் கலந்துரையாடவே தான் வன்னிக்குச் செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சைக் கையாள்வதில் ரணிலை விட சந்திரிகா வேறுபட்டவர்

### நோர்வே அமைச்சர் ஹெல்கிசன்

(ஒஸ்லோ)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா, சமாதானப் பேச்சுக்களைக் கையாள்வதில் பிரதமர் ரணிலை விட வேறுபட்டவராக நடந்து கொள்வதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

லொங்கோன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கற்கை நெறிக்கும் பாதுகாப்புக்குமான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடந்த கலந்துரையாடலிலேயே விதார் ஹெல்கிசன் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ரணிலும் சந்திரிகாவும் இணக்கப்பாட்டுக்கு வருவது அவசியம். இந்தப் பிரச்சினையில் நாம் தலையிடமாட்டோம்.

நோர்வே மனிதாபிமான ரீதியாக மேற்கொள்ளும் உதவிகளின் தொடர்ச்சியாகவே இலங்கையிலும் அமை திப்பணியில் இறங்கியுள்ளது. இது நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையில் உள்ள ஒரு இயற்கையான அமைப்பேயாகும்.

இன்று உலகம் ஒரு கிராமமாகிவிட்டது. இதில் நோர்வே ஒரு பொலிஸ்காரனாகவோ தீயணைப்புப் படையாகவோ இருக்க முடியாது.

ஒரு சமூக சேவகனாக நின்று சேவை செய்வதே பொருத்தமானது. யுத்தத்தால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது போவதால்தான் அமைதிப் பேச்சில் நாட்டம் காட்டப்படுவதாகவும் ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

# தேசிய பிக்குகள் முன்னணி இன்றும் எதிர்ப்புப் பேரணி

தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில் நுகேகொடயில் இன்று பெரும் எதிர்ப்புப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கூடாக இராணுவ, அரசியல் ரீதியில் பலமடைவதைத் தடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இப் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குகளும் அரசியல் கட்சியினரும் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆசியாவில் மக்கள் பாதுகாப்பாக வாழும் நாடாகவிருக்கும் இலங்கை

(பாங்கொக்)

இலங்கையில் அமைதி முயற்சி வெற்றி பெற்றதும் ஆசியாவில் மிகவும் பாதுகாப்பான மக்கள் வாழும் ஒரு நாடாக இலங்கை இருக்கும் என ஜப்பானிய விசேட தூதர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

அமைதி முயற்சி வெற்றி பெற்றதும், யுத்தம் அற்றுப் போகும். பிரச்சினைகள் தீர்ந்த இலங்கை, ஆசியாவில் பாதுகாப்பான நாடாக, மகிழ்ச்சியாக மக்கள் வாழும் நாடாக அமையும்.

யுத்தத்தையும் பிரச்சினைகளையும் தவிர்த்து அமைதியை ஏற்படுத்துவதற்கான ஜப்பானின் கருத்துருவாக்கத்திற்கு இலங்கை நல்லதொரு உதாரணம் எனவும் யசுஷி அகாஷி மேலும் தெரிவித்தார்.

### சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான

# தொழிலாளர் விடுதியில் தங்கியுள்ள படையினரை வெளியேறக் கோரிக்கை

(மானிப்பாய்)

சாவகச்சேரி நகரசபை தொழிலாளர் விடுதிகளில், கடந்த இரண்டரை வருடங்களாகத் தங்கியுள்ள படையினரை வெளியேற்றுமாறு கோரி இந் நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் தமது கோரிக்கையை உதாசீனம் செய்து ஏற்க மறுக்காது போனால், தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

நகர சபை விடுதிகளில் தங்கியுள்ள படையினரை வெளியேற்றி தம் பாவனைக்கு அவ் விடுதிகளை மீளப் பெற்றுத் தருமாறு பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும், படையினர் அங்கிருந்து வெளியேறாததால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும், தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(100)



# குறைதீர் மன்றம்

'உ' அட்டை வைத்திருப்போர் போர் நடவடிக்கை காரணமாக நஷ்டமடைந்த சொத்துக்களுக்கான நஷ்டஈட்டினைப் பெற, அவரவர் திணைக்களங்கள் மூலமாக விண்ணப்பிககலாம் எனக் குறைதீர் மன்றம் மூலமாகக் கூறியிருந்தீர்கள். கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களாகிய நாமும் 'உ' அட்டையினையே வைத்திருக்கின்றோம். எனவே நாம் எமது சங்கத்தின் மூலமாக நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்கலாமா?

மு.வேலழகன்
பண்டத்தரிப்பு.

**நமது ஈழநாடு**

உங்களது நஷ்டஈட்டுப் பத்திரத்தினைப் பூர்த்தி செய்து, நீங்கள் பணியாற்றும் சங்கத் தலைமையகங்களுக்கு அனுப்பினால், அவர்கள் அதனை - வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க ஒழுங்குகள் செய்வர். திருகோணமலையிலுள்ள கூட்டுறவுத் திணைக்களம், புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் இவ் விண்ணப்பங்களின் பேரில், புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

# புலிகளுக்கான சர்வதேச அங்கீகாரம் சந்தேகப்பட்டோரே பெருமிதமாகின்றனர்

**வவுனியா சுத்தானந்த மண்டபத்தில் கடந்த 11 ஆம் திகதி, தமிழ்க்கவி எழுதிய "இனி வானம் வெளிச்சிரும்" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்டு, விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரையிது.**

நாங்கள் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கு யாருக்கு பாதுகாப்பு வேண்டும்? உயர் பாதுகாப்பு வலயம் என்று நிற்பவர்கள், எங்கள் வீடுகளில் வாழ எங்கிருந்தோ வந்தவர்களிற்கு யார் பாதுகாப்பு தரவேண்டுமென்று உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்? நான் வரும் வழியில் சோதனைச் சாவடியிலும் பாதுகாப்புப் பற்றித்தான் இரண்டு படையதிகாரிகள் பேசினார்கள். கப்டன் பெரேராவும், கப்டன் அத்தநாயக்கவும்.

அவர்கள் கேட்டார்கள்- எங்கள் பாதுகாப்பென்று? நான் கேட்டேன் எங்கள் பாதுகாப்பென்று?. பாதுகாப்பு வலயத்திற்குள், பாதுகாப்பாக இருக்க- தமிழ் மக்கள் பாதுகாப்பற்று இருப்பதா?. இந்த நிலை ஏன்? மக்களே படையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிலை எமக்குத் தேவைதானா?

சில பேர் சொல்கின்றனர். புலி புல்லுத்தின்ன ஆரம்பித்து விட்டதென்று. இங்கு எங்கள் மாற்று சகோதர இயக்கங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் எப்படியான கேள்விகளுடன் இருக்கின்றனர் என்று தெரியும். அவர்கள் சார்பாக நானே கேட்கின்றேன்.

புலி புல்லுத்தின்னத் தொடங்கிவிட்டது. நாற்பத்தியெட்டாமாண்டில் கேட்டதைத்தான் இப்பொழுது புலிகள் கேட்கின்றனர். தமிழரசுக் கட்சி வைத்த கோரிக்கைகளைத் தானே இவர்கள் வைக்கின்றனர். இனி அமெரிக்கா வந்துவிட்டது. ஆட்டம் போடமுடியாது. போதாக்குறைக்கு இந்தியன் பாத்துக் கொண்டு நிக்கிறான். துலைக்கப் போகிறான் என்றெல்லாம் விமர்சனம் வருகின்றது.

பிரச்சினைகளை நாங்கள் எப்படிப்பாக்கிறோம். இனிமேல் எந்தக் காலத்திலும் எந்தக் களத்திலும் எந்த நிலையிலும் தமிழ் மக்களை போர் மூலம் வெல்ல முடியாது என்பதை கடந்த சில காலங்களாக ஓங்கி ஒலிக்க வைத்துள்ளோம். இதுதான் உண்மை. இதை உணராமல் வீண் குழப்ப நிலை தோன்றியுள்ளது. போரின் மூலம் அழிக்க முடியாது என்ற நிலையில், தலைப்புச்செய்தி ஒன்றில் ஒருவர் கூறுகின்றார். நீதியும் நியாயமும் மறுக்கப்பட்டதனால் தான் புலிகள் போராடுகின்றனர் என்று.

யார் இதைச் சொன்னவர் என்றால்..... ரணில் விக்கிரமசிங்க...!. அவர் என்ன இயக்கத்தின் உறுப்பினரா? தளபதியா? கொள்கை முன்னெடுப்பாளரா? ஐம்பது வருடமாக நீதி மறுக்கப்பட்டதென்று ஏன் நினைவிற்கு வர வேண்டும். எப்படியோ நீதி மறுக்கப்பட்டதென்று நினைவில் தோன்றியது ஏன் அன்றைக்கு நினைவில் வராமல் போனது? ஏன் வரவில்லையென்று சொன்னால்..... அரசியல் தார்மீக அடிப்படையில் நடக்கவில்லை. புவிசார் பொருண்மிய நலன் மிக்க அடிப்படையில் தான் அரசியல் நடக்கின்றது. தமிழர் இழந்த மாவீரர்களின் தொகை 17648 என்பது எல்லோரிற்கும் தெரியும். இன்னும் சேர்க்கப்பட வேண்டியவர்கள் பலர் சேர்க்கப்படவில்லை. இந்த மண்ணிற்காக வித்தாகிப் போனவர்கள் பல இயக்கத்தவர்கள் உள்ளனர். சில நடைமுறைச் சிக்கல்களை தீர்த் தால் நிச்சயமாக அவர்களையும் தலைவர் அவர்கள் சேர்த்துக் கொள்வார்.

இந்த மாவீரர் தொகையில் 1992 ஆம் ஆண்டிற்குப்பிறகு நாங்கள் இழந்த மாவீரர்களின் தொகை 11,100 மாவீரர்களாகும். ஜயசிக்குறு சண்டையில்- புளியங்குளம் இருக்கின்றதே முகமாலை இருக்கின்றதே, இரண்டு நிலைகளிலேயும் நீங்கள் கடக்கும் போது உங்களிற்கொரு சிலிர்ப்பு வரவேண்டும். எங்களுடைய போராளிகளின் குருதி உறைந்த இடம் அவற்றில்தான் உள்ளது.

புளியங்குளம் புலிகளின் குருதி உறைந்த புரட்சிக்குளம். அந்த இடத்தில் நின்ற எதிரிகளை குறைத்து மதிப்பிடவில்லை, எங்களை அடித்து அவர்கள் வளர, அவர்களை அடி த்து நாம் வளர்ந்தோம். நாங்கள் நன்றி சொல்வது- சந்திரிகா குமாரதுங்க அவர்கட்கும், ரத்வத்த அவர்கட்குமே. அவர்கட்கு நன்றி சொல்ல நாம் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.

எதிரியைப் போல நண்பர் ஒருவரும் கிடையாது. ஆகவே, புளியங்குளம் சமர் போன்ற சமரிலே சமராடியதால்தான் எங்களைப்பற்றி உலகம் பேசியது. எங்களை விட அவர்கள் என்னவோ செய்யிறாங்கள் என்று உலகம் பேசியது. ஆகவே போர் மூலம் தமிழரை வெல்ல முடியாது என்ற நிலையை உருவாக்கி நாம் இன்று பலமாக உள்ளோம்.

நான் ஒருமுறை பேராசிரியர் சிவத்தம்பியைச் சந்தித்தபோது அவர் கூறினார், உங்களுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் கிடையாது. உங்களின் குரல் சர்வதேசத்தில் எடுபடாது என்று.

இன்று நிலைமை மாறி, கோபி அனான் வருகிறார். இவர் ஏன் வருகிறார்?, எப்படி வருகிறார்?, எதற்காக வருகிறார்?, யார் அவரை வரவைத்தது?.

சர்வதேச ரீதியாக புலிகளின் குரல் எடுபடாது என்று எல்லா இயக்கத்தவர்களும் கூறினார்கள். இவர்களின் குரல் சர்வதேசத்தில் வரட்டும் பார்ப்போம் என்றவர்கள், என்னவோ தங்களின் குரல் வெளிவந்தது மாதிரி, இன்று கதைக்கிறார்கள்.

தலைவர் எந்தக் காலத்திலும் ஒரு திட்டத்தை வைத்திருப்பார். தலைவரை புரிந்து கொள்ள ஒருவராலும் முடியாது. என்னாலும் முடியாது. அதனை நான் ஒத்துக் கொள்கிறேன். அவருடைய எண்ணம் போல் இன்று நடைபெறுகின்றது. இதற்கு எல்லோரும் பங்களித்துள்ளனர். இவை நேரம் வரும்போது வரலாற்றுப் பதிவாகியிருப்பதைக் காண முடியும். காலம், நேரம் வரும்போது தான் வெல்ல முடியும். காலம், நேரம் எவ்வாறு வந்தது?

**வே.பாலகுமார் உரையிலிருந்து**

இதைத்தான் நாம் எல்லாரிடமும் கேட்கின்றோம்.. எப்படி இந்த நிலைமை வந்தது?, எப்படியான இழப்புகளுக்கு மத்தியில் இவை வந்தன?. கோபி அனான் வரப் போகிறார். இண்றைக்கு ஜப்பான் காரர் அக்காசி எல்லோரும் கிளிநொச்சியில் வந்திறங்கியிருக்கிறார்கள். ஆளுக்காள் போட்டி போட்டு உதவுவதற்காக வருகின்றார்கள். இதுதானே புலிகளுக்குக் கிடைக்காதென்ற சர்வதேச அங்கீகாரம் என்றீர்கள்.

சர்வதேச அங்கீகாரம் கிட்டிக் கொண்டுள்ளது. தடைபோட்டவர்கள் தடை நீக்குவது பற்றி சிந்திக்கிறார்கள். எவ்வாறு இவை கிட்டின? இதனைப் பெருமையாகப் பார்ப்பதில், இது ஒரு நிலை என்றுதான் கொள்ள வேண்டும். போராட்டத்தின் ஒரு நிலைதான் இது. இப்படியான சூழ்நிலைகளை பக்குவமாக நாம் நடத்திக் காட்டவேண்டும்.

இது இராஜதந்திர வழி. இயலுமானதை செய்து காட்டவேண்டிய நேரம். அதனையே செய்கின்றோம். இது நீண்ட வழியாகும். இது உடன் முடிவதல்ல. இந்த வழியில் தமிழ் மக்களின் பெருமையினை உல கிற்குச் சொல்ல வேண்டும்.

அவ்வாறு நிரூபித்ததன் பின் சர்வதேச வழிகாட்டலை, நம்பகத்தன்மையை, ஜனநாயகத்தை அரவணைக்கும் தோற்றத்தை இன்று உலகம் புரிந்துள்ளது. நீண்ட வழியில் இப்பொழுது நாம் சென்று கொண்டுள்ளோம். நாங்கள் இதுவரை சாதித்தது நிறையவே என்பது உங்களுக்குத் தெரியும்.

அமைதியான இந்தச் சூழ்நிலையில் எமக்கு அநீதி விளைவிக்க நினைத்தால்... மறுகணமும் உலகில் ஒலிக்கும். சமாதானம் சரி வரும், சரிவரா விட்டால்... என்ன நடக்கும்- புலி புல்லுத்தின்னுமா? சிந்திக்க வேண்டும். நாங்கள் யாரையும் குறை சொல்லவில்லை. இதற்கு மேல் என்னால் விளக்கமாகச் சொல்ல முடியாது.

*(நாளை தொடரும்)*

**- கனகரவி**

# சர்வதேச புலனாய்வு அரசியல்



பாக்தாத்திலுள்ள சதாமின் மாளிகை

*(நேற்றைய தொடர்ச்சி)*

**U.N.** தனது ஆயுதப் பரிசோதகர்களை ஈராக்கிற்கு அனுப்பி வைத்து அங்கே அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றதா? என்பதைப் பரிசோதிப்பது வழமையாக நடைபெறுகின்ற ஒருவிடயம். இப்படியான பரிசோதகர்கள் குழுவில் சீ.ஐ.ஏயின் ஆட்களும் கலந்துவிடுவார்கள் என்பது **U.N.**இற்கும் தெரியும். ஈராக்கிற்கும் தெரியும்.

அப்படிக் கலந்து விட்டவர்கள்- ஈராக்கில் பார்த்தவை, சீ.ஐ.ஏ இரகசியமான முறையில் சேகரித்த உளவுத் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில்- ஈராக் தயாரித்த அணுகுண்டுகள் பற்றிய உத்தியோகபூர்வமற்ற சில தகவல்கள் இருக்கின்றன.

அதன்படி- ஈராக் தயாரித்த முதலாவது அணுகுண்டு அளவில் கொஞ்சம் பெரியது. இதன் நிறை 985 கிலோகிராம். அதன் குறுக்களவு 58 அங்குலம். சாதாரண வெடிகுண்டு என்ற ரீதியில் பார்த்தால் 985 கிலோகிராம் நிறையும் 58 அங்குலக் குறுக்களவும் உள்ள வெடிகுண்டு ஒன்றும் பெரியவிஷயமல்ல.

அணுகுண்டு என்று பார்த்தால் இவ்வகையான தயாரிப்புக் கொஞ்சம் மேலதிகமான நிறையுடையதே. அதன் அதீதநிறை காரணமாக அவற்றை ஏவுகணைகள் மூலம் ஏவமுடியாது. இவ்வளவு எடையைத் தூக்கிக்கொண்டு செல்லும் ஏவுகணைகள் அதிகதூரம் போகவும் முடியாது. இப்படியான அணுகுண்டுகளை ஓரளவு தூரத்திற்கு கொண்டு சென்று போடவேண்டி வந்தால் ஒரு விமானம் மூலம் எடுத்துச் சென்று தான் போடவேண்டும்.

ஈராக் இருக்கும் புவியியல் அமைப்பில் விமானம் மூலம் அணுகுண்டு எடுத்துச் செல்வது மிகவும் ஆபத்தானது. காரணம், ஈராக்கின் ஒவ்வொரு அசைவையும் கவனிக்கும் சி.ஐ.ஏக்கு ஈராக்கில் இருந்து அணுகுண்டுடன் விமானம் கிளம்புகின்றது என்பது தெரியவந்த மறுநிமிடமே ஈராக்கைச் சுற்றியுள்ள நாடுகளிலுள்ள அமெரிக்க இராணுவ முகாம்களிலிருந்து ஏவுகணைகள் சீறிக்கிளம்பும்.

அந்த ஏவுகணைகளில் ஏதாவது ஒன்று, ஈராக்கின் விமானத்தைத் தாங்கி அழிக்க முடிந்தால் ஈராக்கால் தயாரிக்கப்பட்ட அணுகுண்டு ஈராக்கிலேயே வெடித்து விடக்கூடும்.

இந்தக் காரணத்துக்காகத்தான் 1990 களில் நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின்போது தன்னிடமுள்ள அணுகுண்டுகளை ஈராக் கையில் எடுக்கவில்லையென்று ஊகிக்கப்படுகின்றது. வளைகுடா யுத்தத்தின் போது கையில் அணுகுண்டு இருந்தும் உபயோகம் இல்லை என்ற நிலையில் இருந்த ஈராக் அதன் பின்னர் இரண்டாவது கட்ட அணுகுண்டு தயாரிப்பில் இறங்கியபோது இம்முறை அவர்களின் இலக்கு- நிறை குறைந்த சிறிய அணுகுண்டு தயாரிப்பது. முதலில் தயாரித்த 985 கிலோக்கிராம் எடையுள்ள அணுகுண்டில் இருந்த யுரேனியத்தை உபயோகித்து, ஈராக்கால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது கட்ட அணுகுண்டின் நிறை 645 கிலோகிராம் மாத்திரமே. குறுக்களவு 25 அங்குலம். இப்படியான நிறையும், அளவும் உள்ள அணுகுண்டு ஒரு வகை ஏவுகணையில் பொருத்திச் செல்ல முடியும். இதற்கு விமானம் தேவையில்லை.

இந்த எடைகுறைந்த இரண்டாவது கட்ட அணுகுண்டுத் தயாரிப்பிற்குத்தான், அதன் புதிய தொழில்நுட்பத்திற்காக ஒரு அணு குண்டிற்கு 32 **Electronic Switch** என்ற வீதத்தில் தேவைப்பட்ட மருத்துவ உபகரணமான லிப்ரோ கிறப்ரரிற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் என்ற பெயரில், ஜேர்மனியில் இருந்து பிரான்ஸ் ஊடாக ஈராக்கிற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

அணுகுண்டைத் தயாரிக்க விரும்புவது வேறு, தயாரிப்பது வேறு. தயாரிப்பதை வெற்றிகரமாக வெடிக்கவைப்பது வேறு.

உலக நாடுகளைப் பொறுத்தவரை துப்பாக்கி எடுத்த எல்லா நாடுகளினதும் கனவு அணுகுண்டு தயாரிப்பது. ஆனால், விரும்பும் எல்லா நாட்டிற்கும் அணுகுண்டு தயாரிப்பிற்கான மூலப்பொருட்களும் சரியான தொழில்நுட்பமும் கிடைத்துவிடுவதில்லை. பல நாடுகள் அணுகுண்டுக்கான இரகசியத் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கின்றன. அவற்றுள் பல இன்ன மும் இறுதி வடிவம் பெறாமல் வெறும் தயாரிப்பு முயற்சி என்ற நிலையிலேயே இருக்கின்றன. சில நாடுகள் ஒவ்வொரு விதமான தொழில்நுட்பத்தில் தங்களது வசதிக்கேற்ப சில அணுகுண்டுகளைத் தயாரித்து முடித்திருக்கின்றன. ஆனால் இவற்றில் எத்தனை சதவீதம் சரியாக இயங்கும் அல்லது வெடிக்கும் என்று கூறமுடியாத தன் காரணம்- அவை பகிரங்கமாக வெடிக்க வைத்து பரிசோதனை செய்யமுடியாத நிலை இருப்பது தான்.

உதாரணமாக- வடகொரியாவில் சில அணுகுண்டுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவை அந்தக்கால ரஷ்யாவின் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டவை என்றும் கூறப்படுகின்றது. அதாவது சுமார் 15 ஆண்டுகளுக்கு முந்திய **Out Dated Technology** யில் செய்யப்பட்டவை. இப்போது உபயோகிக்கப்பட்டால் சரியாக இயங்கி வெடிக்கக்கூடிய சாத்தியம் என்பது கிட்டத்தட்ட எமது வானொலிகளில் **Internet** நேரடி ஒலிபரப்புப் போலச் சில சமயங்களில் வேலை செய்தாலும் செய்யும். வேலை செய்யாவிட்டாலும் செய்யாது.

இந்த வகையில் ஈராக்கிடம் இருப்பதாகக் கூறப்படும் அணுகுண்டு எந்தளவிற்கு நிஜமாக வெடிக்கக்கூடிய தொழில் நுட்பத்தை உடையவை, ஈராக்கிடம் ஆயுதங் கள் இருக்கின்றனவா என்பதைப் பலசார்பில் கண்காணிக்கும் கண் காணிப்புக்குழு வல்லுனர்களின் கருத்துப்படி- ஈராக்கின் கையிலிருக்கும் தொழில்நுட்பம் ஓரளவு **Up to Date** ஆன **Advance Technology.** இவை சிக்கடிக்காமல் இயங்கக் கூடிய சாத்தியம் இருக்கின்றன என்பது தான் இங்குள்ள கவலையான, ஆனால் நிஜமான விடயம்.

இது வரை வெளிவந்த தகவல்களின்படி, ஈராக் ஆராய்வு செய்து கொண்டிருக்கும் தொழில்நுட்பம் எதுவென்றால் - அணுகுண்டு இயக்கத்திற்கு ஒரு **Inclusive Shok Wave** ஐ உருவாக்குவதுதான். இந்த **Shok wave,** அணுகுண்டிலுள்ள யுரேனியம் பகுதியை ஒரு **Rubber** பந்தை நசிப்பது போல பலமாக **stress** பண்ணுகிறது. அப்படி மிலேனியம் அழித்தல் ஒன்றுடன் ஒன்று வேகமாக மோதி நசிக்கப்படும்போது, அவற்றிலிருந்து ஒரு உந்துசக்தி உருவாகிறது. அதுவே ஒரு **Chain Reaction** ஐ உருவாக்கிவிடுகின்றது.

**கனடாவிலிருந்து ரிஷி**

இதுதான் ஈராக் உற்பத்தி செய்துள்ள அணுகுண்டின **Technology.** இந்தத் தொழில்நுட்பம் சரியாக இயங்கக் கூடியது என **U.N** இன் ஆயுதப் பரிசோதகர்கள் கருகிறார்கள்.

அணுகுண்டின் ஆராய்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் ஒரு நாட்டில் இப்படிப்பட்ட தொழில்நுட்பத்தின் அறிவு வருவதற்கே 15-20 ஆண்டுகள் செல்லலாம்.

இதிலி ருந்து ஈராக் நீண்ட காலமாகவே அணுகுண்டு தயாரிப்பு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது என்பதை ஊகிக்க முடிகிறது.

*(நாளை தொடரும்)*

# இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்தும் நிலைபெற்றுள்ள

# அமெரிக்க உயர் குழாத்தினரின் நலன்பேணும் அரசியல்

## சுயநிர்ணயம் — ஒரு பார்வை
### பகுதி - 16


இக்கட்டுரைத் தொடரிலே கடந்த இரண்டு வாரகாலமாக ஐக்கிய அமெரிக்க நாட்டினது சமஷ்டிமுறையைப் பற்றி ஆராய்ந்து வந்துள்ளோம்.

இந்த வகையில், சென்ற வாரம் முதல் ஐக்கிய அமெரிக்க அரசியல் அமைப்பின் சிறப்பியல்புகள், அதன் சமூகப் பின்புலத்திற்கு ஏற்றவகையில் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை கூர்ந்து நோக்கியுள்ளோம். இதன் தொடர்ச்சியை இவ்வாரமும் இக்கட்டுரை ஆராயும்.

ஐக்கிய அமெரிக்க அரசியல் அமைப்பின் சிறப்பியல்புகள் என்ற அடிப்படையில் 'மக்கள் இறைமை'க்கு முக்கியத்துவம் அளிக்கும் இயல்பு, வரையறுக்கப்பட்ட அரசாங்க முறைமை என்ற இரு சிறப்பியல்புகளையும் ஏற்கனவே இக்கட்டுரைத் தொடரிலே ஆராய்ந்தபடியால், இன்று மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையிலான ஆட்சி முறைமை என்ற சிறப்பியல்பில் இருந்து தொடர்ந்து ஆராய்வோம்.

**இரு அரசாங்க முறைமை**

அமெரிக்க மக்கள் 'இரு அரசாங்க முறைமை'க்குள் ஆளப்படுகின்றனர் என்னும்போதே - அமெரிக்கா சமஷ்டி முறைமைக்கு நிர்வகிக்கப்படும் நாடு என்பதனை யாரும் அறிவர்.



அமெரிக்காவின் ஆரம்பகாலப் பாராளுமன்றத்தின் அமர்வு நடைபெறும் ஒரு காட்சி.

இந்த வகையில் அங்கு மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் என இரண்டு அரசாங்கங்கள் காணப்படுகின்றன. அமெரிக்க மக்கள் தாம் வாழும் மாநிலத்தின் பிரஜைகளாகவும், அதேநேரம் ஐக்கிய அமெரிக்காவினது பிரஜைகளாகவும் காணப்படுவர். உதாரணமாக - ஜோர்ஜிய மாநிலத்தில் வாழும் ஒரு அமெரிக்கர், சமகாலத்தில் ஜோர்ஜியாவின் பிரஜையாகவும் ஐக்கிய அமெரிக்காவின் பிரஜையாகவும் இருப்பார்.

மத்திய அரசாங்கமானது - தனக்கு அரசியல் திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், நடைமுறை விடயங்களில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்களின் அடிப்படையிலும் - தனது ஆட்சியினைச் செலுத்தும்.

அரசியல் திட்டத்தின் பிரகாரம் மத்திய அரசாங்கத்திற்கு 15 விடயங்களில் மட்டுமே அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

✦ வரிவிதித்தலும், கடன்பெறுதலும்.

✦ மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம்.

✦ வெளியுறவு மற்றும் வெளியுறவுக் கொள்கை உருவாக்கல்.

✦ பாதுகாப்பு மற்றும் படைப் பராமரிப்பு.

✦ போர்ப் பிரகடனம்

✦ நாணயக்கொள்கை மற்றும் நாணயம் வெளியிடல்.

✦ தபால் மற்றும் தொலைத் தொடர்பு.

✦ காலாவதியான நிர்வாக விடயங்கள் புற்றிய சட்டமியற்றுதல்.

✦ சர்வதேசச் சட்டத்திற்கு எதிராக குற்றம் இழைத்தவருக்கான தண்டனை.

✦ பதிப்புரிமை தொடர்பான சகல நடவடிக்கைகள்.

✦ உயர்நீதிமன்றத்திற்கு உட்பட்ட சகல விடயங்கள்.

✦ மத்திய அரசினது சட்ட அமுலாக்கம்.

✦ உள்நாட்டுக் கலகம் ஏதேனும் ஏற்படினும் அதனை அடக்குதல்.

✦ தனக்கென ஒதுக்கப்பட்ட நிலப்பகுதியை நிர்வகித்தல்.

✦ மக்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளித்தல்

என்பனவாகும்.

இந்த வகையில் மேற்சொன்ன அதிகாரங்களை விட அனைத்து விடயங்களையும் மக்கள் நலன் பேணும் வகையில் மாநில அரசாங்கமே மேற்கொள்ளும்.

ஆனால், அமெரிக்க நாடு முழுவதும் முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பே காணப்படுவதால் - கல்வி, சுகாதாரம், மக்கள் தொடர்பு போன்ற விடயங்களைப் பெரும் முதலாளிகளே கையாள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் முன்பள்ளியில் இருந்து பல்கலைக்கழகப்படிப்பு வரை தனியார்துறையார் கணிசமான அளவு கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகித்து வருகின்றனர்.

ஒப்பீட்டளவில் தனியார்துறைப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களிலே பெருமளவு மாணவர்கள் கல்வி கற்று வெளியேறுவது மட்டுமன்றி, சிறந்த கல்விமான்கள் மற்றும் தலைவர்களும் தனியார் பல்கலைக்கழகங்களிலே கல்வி கற்றவர்களாகவே பிரகாசிப்பதாக அமெரிக்காவின் கல்வி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



அமெரிக்காவின் ஆரம்பகால வர்க்கவேறுபாடு.

இந்தவகையில் - ஏனைய சமஷ்டி முறைமைகளில் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளும் -அமெரிக்காவின் தனியாருக்கு கையளிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மாநில அரசினைப் பொறுத்த வரையில், மக்களின் நலன்பேணும் அனைத்து விடயங்களையும் - அது தனது ஆள்புல - இறைமைக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளும். பொருளாதார நடவடிக்கைகளில் பெரும்பாலானவை அரசின் கட்டுப்பாடற்றவகையில் மேற்கொள்ளப்படுவதால் - மாநில அரசுக்கோ, மத்திய அரசுக்கோ அது சார்ந்த துறையில் கணிசமான அளவு அதிகாரங்கள் இல்லை என்றே கூறலாம்.

**அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை வலியுறுத்தியுள்ள அரசியற்திட்டம்**

அதிகாரப்பிரிவினை (Separation of Power) என்னும்போது - அரசியற் திட்டத்தின் மூலமாக அதிகாரங்கள் ஒருவரிடமோ அல்லது ஒரு துறையிடமோ மட்டும் போய்ச் சேராது - அரசாங்கத்தின் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளுடனும் அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றமையே 'அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு' எனக் கூறப்படுகின்றது.


இந்த வகையில் - அமெரிக்க அரசாங்க நிர்வாகம் - மூன்று தனித் தனித்துறைகளான சட்டம், நிர்வாகம், நீதி ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டு - ஒன்று மற்றொன்றின் அதிகார எல்லைக்குள் தலையிடாமல் நிர்வாகத்தினை மேற்கொண்டுவர வழிசெய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் - சட்டங்களை இயற்றும் அதிகாரம் அமெரிக்க அரசாங்கத்திடமும், நிர்வாக அதிகாரங்கள் ஜனாதிபதியிடமும், நீதி சம்பந்தப்பட்ட விடயங்கள் தலைமை நீதிமன்றத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

"அதிகாரப் பிரிவினை" என்ற கோட்பாட்டை பிரெஞ்சு நாட்டறிஞர் 'மொண்டஸ் கியூ' முன்வைத்துள்ளார். அவரது கொள்கைப்படி - சட்டமியற்றும் அதிகாரம், அதனை நிறைவேற்றும் அதிகாரம், நீதித்துறை

**வேலும்மயிலும் சேந்தன்**

யினது விடயங்களை கையாள்வது போன்ற 3 விடயங்களும் ஒரு நபரிடம் போய்ச் சேருமிடத்து, அது கொடுங்கோலாட்சிக்கு வழி சமைக்கும் என்பதால் - அமெரிக்க மக்கள் தாம் முன்பு அனுபவித்த கொடுங்கோன்மையின் காரணமாக 'அதிகாரப் பிரிவினை' கோட்பாட்டை சிறந்த முறையில் தமது அரசியல் திட்டத்தில் அமுல்படுத்தினர் எனலாம்.



தமது நலன்பேணும் நோக்கில் திட்டங்களை வரையும் உயர் குழாத்தினர்.

மேலும், தாமாக விரும்பி இணைந்த மாநிலங்களில்- உயர் குழாத்தினர் - தமது நலன்கள் எவ்வகையிலும் பாதிக்காத முறையில் இருப்பதனை உறுதி செய்யவே 'அதிகாரப் பிரிவினை'க் கோட்பாட்டினை முன்வைத்தனர் என சாள்ஸ் பேணாட் தனது An Economic Interpretation of the Constitution -1913 என்ற நூலில் கூறியுள்ளார். அவர் மேலும் அமெரிக்க தேசியவாதத்துடன் "பொருள்சார் தேசியவாதம்" (Material Based Nationalism) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் அமெரிக்காவின் அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் எல்லாம், அரசியல் திட்டத்தின் முன்னோடிகளாக உயர் குழாத்தினர் நலன்களைப் பேணும் அம்சமாகவே காணப்படுகின்றன.

**சமநிலைத் தலையீடுகள்**

சமநிலைத் தலையீடு என்பது முதற்சொன்ன அதிகாரப் பிரிவினையின் காரணமாக - ஒரு அரசாங்கத்தின் சட்டமியற்றும் துறை, நிர்வாகத்துறை, நீதித்துறைகள் என்பன தனித்து இயங்குமாயின், அது நாட்டில் நல்லாட்சிக்குப் பதிலாக பெரும் குழப்பத்தையே தோற்றுவிக்கும் என்பதால், ஒவ்வொரு துறையினையும் தனித்தியங்க விடாது ஒரு துறையுடன் மற்றைய துறையை இணைத்துச் செயற்படுவதன் மூலம் - ஒன்றையொன்று கண்காணிக்கவும் ஏற்ற வகையில் தொடர்புபடுத்தி வைப்பதனையுமே குறித்து நிற்கிறது. இந்த வகையில் சமநிலைத் தலையீடு என்பது அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் பக்கவிளைவே என்றால் அது மிகையானதல்ல.

இவ் விடயம் அமெரிக்க அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**மாற்றங்களுக்குட்படாத அரசியலமைப்பு**

அமெரிக்க அரசியல் திட்டமானது தனது சட்ட வரைபுகளில் உறுதியான தொடர்ச்சித் தன்மையைப் பேணுகிறது.

1787 மே மாதம் உருவாக்கப்பட்ட அரசியல் திட்டமானது தனது முதலாவது திருத்தச் சட்டத்தினை 15 ஆம் திகதி டிசம்பர் மாதம் 1791 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து தனது 26 ஆவது திருத்தச் சட்டத்தினை 30 ஆம் திகதி யூன் மாதம் 1971 ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

இந்த வகையில் - ஏறத்தாழ 2 நூற்றாண்டு காலத்துக்கு 26 திருத்தங்களை மட்டும் மேற்கொண்டு நெகிழாத அரசியல் திட்டமாக அமெரிக்க அரசியல் திட்டம் காணப்படுகிறது.

இவ்வாறு நெகிழாத அரசியல் திட்டமாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று- அரசியல் திட்ட மாற்றத்திற்கான மசோதாவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றுவதானால் 2/3 பெரும்பான்மை தேவைப்படுவதோடு, 52 மாநிலங்களினதும் சட்டசபைகளால் கூட்டப்படும் அரசியல் திட்ட திருத்தச் சபையின் 3/4 பெரும்பான்மையும் தேவையானதாகும்.



தனது தொழில் முயற்சியினைக் கண்காணிக்கும் உயர்குழாத்தினர் ஒருவர்.

இரண்டாவது காரணம் - என்று அமெரிக்காவிற்கான அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டதோ- அன்றிலிருந்து இன்றுவரை அமெரிக்காவின் அரசியல் திட்டத்தினை மாற்ற வேண்டிய சமூகச் சூழ்நிலை எவையும் தோன்றவில்லை. இருநூற்றிப் பதினொரு வருடங்களாக அமெரிக்க நாட்டினது உயர் குழாத்தினர் தங்கள் நலன்களை பேணியவாறு இருப்பது இதன் விரிவான காரணியாகும்.

இந்த வகையில் அரசியல் திட்டம், அமெரிக்க சமூகம் முதலாளித்துவ சமூக அமைப்பினைச் சார்ந்ததாகவே விளங்குகின்றது என்கின்றார், அலன் சிமித் என்ற பொருளியல் அறிஞர் (The American Scheme of government was planned and setup to perpetuate the asendancy of the property holding class).

இவ்வாறு, அரசியல் திட்டம் இன்னும் அமெரிக்காவினுள் உயர் குழாத்தினருக்கே உரியதான அரசியல் திட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையை மாற்றியமைக்காத அல்லது மாற்றியமைக்கவிரும்பாத வகையிலேயே அமெரிக்காவின் அரசியல் ரீதியான ஆளும் தரப்பும் இன்று வரை செயற்பட்டுவருகிறது.

(பிரதி செவ்வாய் தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உயர்பாதுகாப்பு வலயத்தில் புலிகள் யுத்தக் குடும்பங்களை குடியேற்றவுள்ளனர்!

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

(புதுடெல்கி)

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது என்ற பெயரில் புலிகள் தமது யுத்தக் குடும்பங்களை குடியமர்த்த முனைவதாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் செய்தியாளர் மத்தியில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது யதார்த்தமே. ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் மக்களின் உரிமைகள் கட்டாயம் கருத்தில் எடுக்கப்படவேண்டும் எனவும், லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவுக்குச் சென்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர், இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால், சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கிட்டு பூங்கா மீண்டும் புனரமைக்கப்படுகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ்.முத்திரைச்சந்தியிலுள்ள, மூத்த தளபதி கேணல் கிட்டு நினைவாக அமைக்கப்பட்ட கிட்டுப்பூங்கா, யாழ். மாநகர சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

வங்கக்கடலில் காவியமான, கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள், எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் கிட்டுப் பூங்காவில் மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளன.

மேற்படி எழுச்சி நிகழ்வை நடாத்துவதற்காகவே, நீண்டகாலமாகப் பற்றைகள் வளர்ந்து காணப்பட்ட இப்பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

(ரா,கி)

## பிரதமருடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியேற்றும் விடயம் குறித்து இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அலரிமாளிகையில் - முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் இச்சந்திப்பில்,

இம்முறை பல்கலைக்கழக மாணவர் தெரிவில் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்ட அநீதி குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

இச்சந்திப்பில் - யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளார்.

## உலக வங்கி உபதலைவர் யாழ்ப்பாணம் வருகிறார்!

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் தென்னாசியாவிற்கான அபிவிருத்தி செயற்திட்ட உதவித்தலைவர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

தென்னாசியாவின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் உதவித் தலைவர் டாக்டர் மீக்கோ நிஷிமிசு, இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளரான பீற்றர் கறல் ஆகியவர்களே வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகை தரும் இவர்கள், வெள்ளிக்கிழமை காலை யாழ்.அரச அதிபர் பத்மநாதனுடன் கலந்துரையாடல் நடத்திவிட்டு தென்மராட்சிக்கும், வட்டுக்கோட்டைக்கும் சென்று,

பின்னர் உடுவிலிலுள்ள அகதி முகாம்களுக்கும் சென்று பார்வையிடவுள்ளனர்.

இவர், யாழ்ப்பாணத்தில் காணாமற்போனோர் சம்பந்தமாக ஆராய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர்,

கிளிநொச்சிக்கும் விஜயம் செய்யும் அவர், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும், அபிவிருத்தி சம்பந்தமாகவும்,

விடுதலைப் புலிகளுடன் ஆராய்வார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## டாவோஸ் மாநாட்டுக்கு பாலாவும் செல்லலாம்!

(கொழும்பு)

டாவோஸில் நடைபெறவுள்ள சர்வதேச பொருளியலாளர்கள், வர்த்தகர்கள், உலகத்தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டில், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொள்ளலாம் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இங்கிலாந்துக்கெதிராக இலங்கை அணி வெற்றி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் நேற்று நடைபெற்ற வி.பி. முக்கோண சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கையணி இங்கிலாந்து அணியை 31 ஓட்டங்களால் தோற்கடித்தது.

## ஈழத்துப்பாடலுக்கு பி.பி.சி எவ்வாறு இடமளித்தது

### விசாரணை நடத்த அரசு உத்தரவு

பி.பி.சி. நிறுவனம் நடத்திய பாடல் தெரிவுப் போட்டியில் 'பூவும் நடக்குது' என்ற ஈழத்துப்பாடல் தெரிவு செய்யப்பட்டது குறித்து, விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் பாயிஸ் முஸ்தபாவுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இந்தப் பாடல் பிரிவினையை வலியுறுத்துவதாகவும், இதற்கு எவ்வாறு பி.பி.சி. அனுமதித்தது என்பது குறித்தும் விசாரணை நடத்துமாறு பாயிஸ் முஸ்தபாவுக்கு இலங்கை அரசு உத்தரவிட்டிருக்கிறது.

## அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் 35 பேர் திருப்பியனுப்பப்பட்டனர்

அவுஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்ட 35 இலங்கையர்கள் நேற்றிரவு நாடு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கும் இவர்களை, குற்றப்புலனாய்வுப் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டு, அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கூறுகிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர்களே இவ்வாறு திரும்பியுள்ளார்கள்.

## இராணுவ...

பனவை நேரில் சந்தித்த பிரதமர், மறுசீரமைப்புக்கான உத்தரவை வழங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மறுசீரமைப்புப் பற்றிய பூரணமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவிடமும் பிரதமர் கேட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை, இராணுவத்திற்கு ஏற்பட்ட மிகமோசமான இழப்பிற்கு புலனாய்வுத்துறையினரின் பலவீனமே காரணம் என்று பிரதமரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(200)

## ஜனாதிபதி ஊடகப்பேச்சாளர் தனியார் நிறுவனத்திலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், தான் பதவி வகிக்கும் தனியார் கம்பனியிலிருந்து பதவி விலக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராகப் பதவியேற்ற பின்னர், ஹரீம் பீரிஸ் - தான் முன்பு பணியாற்றிய நிதி முகாமைத்துவக் கம்பனிக்கு ஒழுங்காகச் செல்லவில்லை என்றும்,

இதனால் அவரைப் பதவி நீக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை - ஜனாதிபதியின் செயலாளராக உள்ள பலபத்தபெண்டியின் இடத்துக்கு ஹரீம் பீரிஸ் நியமனமாகலாம் என்ற ஊகங்கள் கொழும்பில் காணப்படுகிறது.

தற்போது ஹரீம் பீரிஸே ஜனாதிபதியின் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். ஹரீம் பீரிஸ் கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொங்கு தமிழ் 2 ஆம் ஆண்டு நிகழ்வு 17 இல் யாழ். பல்கலைக்கழகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் 2001 ஆம் ஆண்டு அனுஷ்டிக்கப்பட்ட பொங்கு தமிழின் இரண்டாம் ஆண்டு நிகழ்வு, எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில்,

தமிழர் தாயகப் பிரதேசங்களில் பொங்கு தமிழ் நடைபெற ஏற்பாடு செய்த அனைவரையும் யாழ். வரவழைத்து அவர்களை இந்நிகழ்வில் பங்குபெற வைத்து அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க,லி)

## கொழும்பு...

மாநகரசபையின் அனுமதி பெறாமல் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நுழைந்தமை மற்றும் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வந்த இவர்கள் இங்கு ஓர் மாநகரசபை இயங்குகின்றது என்பதை மதிக்காமல், யாழ். மாநகரசபையினரைச் சந்திக்காமற் சென்றமை, யாழ். மாநகரசபையின் இறைமையைப் பாதிப்பதுடன், யாழ். மாநகரசபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களின் கௌரவத்தைச் சிதைக்கக்கூடியதாகவுள்ளதென, யாழ். முதல்வர் செல்லன் கந்தையன் கவலை தெரிவித்ததுடன்,

இக்குழுவினர் யாழ். மாநகரசபையினால் நிர்வகிக்கப்படும் பொதுசன நூலகத்திற்குள் மாநகரசபையின் அனுமதியின்றிச் சென்று பார்வையிட்டதுடன் புகைப்படமும் எடுத்துள்ளனர். இது ஓர் நாகரிகமற்ற செயற்பாடாகும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், மேல் அதிகாரிகளின் உத்தரவின்றி கொழும்பு மாநகரசபை பிரதிமேயர் தலைமையிலான குழுவினரை யாழ்.பொதுசன நூலகத்திற்குள் செல்ல அனுமதித்த வாயிற் காவலாளி மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் யாழ். முதல்வர் தெரிவித்தார். (லி,கி,ரா)

## ஜெனரல்...

வழங்குவார் என்றும்,

பலாலி ராணுவ முகாமில் மாநாடு ஒன்று இடம்பெறும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே அவர் இங்கு வருவதாகவும் தெரிவித்த அவர், பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியொருவரும் விரைவில் இலங்கை வருவார் என்றும் தெரிவித்தார்.

## தமிழக...

களில் மீள்குடியமர்த்துவது குறித்து ஆராயப்படவுள்ளது. இவ்வாறு மீண்டும் நாடு திரும்பும் சமயத்தில் பல்வேறு சட்டப் பிரச்சினைகளும், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் தோன்றக்கூடும் என்றும், இவ்வாறான பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்தும் இன்றைய கூட்டத்தில் மிக முக்கியமாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இக்கூட்டத்தில் இந்தியத் தூதரக அதிகாரிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அகதிகளை திருப்பி அழைப்பதற்கு விசேட கப்பல் சேவைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.50 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.96 | 156.23 |
| 1 யூரோ | 101.69 | 102.83 |
| 1 சுவிஸ் பிராங் | 69.54 | 70.59 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 55.92 | 56.88 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

பரீட்சை - 2003

1st MID TERM EXAMINATION-2003

2003ஆம் ஆண்டிற்கான முதலாவது பரீட்சை 17-01-2003 அன்று காலை 8மணிக்கு ஆரம்பமாகும்.

தரம் 4 முதல் O/L வரை

| | | |
|---|---|---|
| 17-01-03 | தமிழ் | 8 am |
| 17-01-03 | சமயம் | 9 am |
| 18-01-03 | ஆங்கிலம் | 8 am |
| 18-01-03 | விஞ்ஞானம் | 9 [illegible] |
| 18-01-03 | கணிதம் | 4 pm |
| 19-01-03 | சுற்/சமூ | 8 am |
| 19-01-03 | வர்/சுகா/புலமை | 9 am |

- வெளி மாணவரும் பரீட்சை எழுதலாம்
- வெளியாரும் வினாப்பத்திரம் பெறலாம். (சி-487)

நல்லூர் சயன்ஸ் அக்கடமி
நல்லூர் கோயில் முன்பாக.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



நமது

# ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

| | 2003 ஜனவரி | 2003 பெப்ரவரி | 2003 மார்ச் | 2003 ஏப்ரல் | 2003 மே | 2003 ஜூன் |
|---|---|---|---|---|---|---|
| ஞா | 5 12 19 26 | 2 9 16 23 | 30 2 9 16 23 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| தி | 6 13 20 27 | 3 10 17 24 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| செ | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| பு | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| வி | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| வெ | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| ச | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |

| | 2003 ஜூலை | 2003 ஆகஸ்ட் | 2003 செப்டம்பர் | 2003 அக்டோபர் | 2003 நவம்பர் | 2003 டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|
| ஞா | 6 13 20 27 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 |
| தி | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| செ | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| பு | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| வி | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| வெ | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| ச | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |

### தை
15 - தைப்பொங்கல் தினம்
17 - பௌர்ணமி தினம்

### மாசி
04 - தேசிய தினம்
12 - ஹஜ்ஜி பண்டிகை
16 - பௌர்ணமி தினம்

### பங்குனி
01 - மஹா சிவராத்திரி
18 - பௌர்ணமி தினம்

### சித்திரை
13 - தமிழ், சிங்கள புத்தாண்டிற்கு முன்னைய தினம்
14 - தமிழ், சிங்கள புத்தாண்டு
16 - பௌர்ணமி தினம்
18 - பெரிய வெள்ளி

### வைகாசி
01 - மே தினம்
14 - மிலாட் அன் நபி
15 - வெசாக் பௌர்ணமி
16 - வெசாக் பௌர்ணமியை தொடர்ந்த தினம்

### ஆனி
14 - பௌர்ணமி தினம்

### ஆடி
13 - பௌர்ணமி தினம்

### ஆவணி
11 - பௌர்ணமி தினம்

### புரட்டாதி
10 - பௌர்ணமி தினம்

### ஐப்பசி
09 - பௌர்ணமி தினம்
24 - தீபாவளி தினம்

### கார்த்திகை
08 - பௌர்ணமி தினம்
26 - ரம்ழான் பண்டிகை

### மார்கழி
08 - பௌர்ணமி தினம்
25 - கிறிஸ்மஸ் பண்டிகை

## எழுச்சி நாட்கள்

- அன்னை பூபதி எழுச்சிநாள் (சித்திரை 19)
- கரும்புலிகள் நாள் (ஆடி 05)
- தியாகி திலீபன் நாள் (புரட்டாதி 26)
- தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் (ஐப்பசி10)




♦ மாவீரர் தினம் (கார்த்திகை 27)